விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 23 வியாழக்கிழமை (06.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

## முஸ்லிம்களின் இன ஒற்றுமை

# பௌத்த பீடங்களையே கெஞ்ச வைத்தது!

### முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பதவியை பொறுப்பேற்க மகா சங்கத்தினர் கோரிக்கை



**(கண்டி)**

**அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் தமது பதவிகளை பொறுப்பேற்க வேண்டும் என மூன்று பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகா சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

*(23ஆம் பக்கம் பார்க்க)*

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு
### ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்

24ஆம் பக்கம் பார்க்க....

### நீரிழப்பு காரணமாக
## எட்டு மாத குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

வயிற்றோட்டம் காரணமாக சிகிச்சை பெற்று வந்த எட்டு மாத குழந்தை நீரிழப்பு ஏற்பட்டு பரி

23ஆம் பக்கம் பார்க்க....

### யாழ்.பல்கலையில்
## இந்து கற்கைகள் பீடம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து கற்கைகள் பீடம் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக்கழகத்தின்

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு கிழக்கைச் சேர்ந்த 1,130 தொண்டராசிரியர்களுக்கு
### ஜூன் 29ஆம் திகதி நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆயிரத்து 130 தொண்டர் ஆசிரியர்களுக்கு வரும் 29ஆம் திகதி நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை இவர்களுக்கான நியமனக் கடிதங்

24ஆம் பக்கம் பார்க்க....

### மனித உரிமை விவகாரங்களில்
## இலங்கை முன்னேற்றம் காண அழுத்தம் கொடுக்கப்படும் – பிரித்தானியா

(லண்டன்)

மனித உரிமை விவகாரங்களில் இலங்கை இந்த ஆண்டு முன்னேற்றத்தை காண்பதற்கு அழுத்தங்களை கொடுக்கப் போவதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான மனித உரிமை நிலவரம் குறித்து பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

### தியாகி பொன்.சிவகுமாரனின்
## 45ஆவது நினைவு தினம்
### யாழ்.பல்கலையில் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

தியாகி பொன்.சிவகுமாரனின் 45ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் தியாகி

23ஆம் பக்கம் பார்க்க....

### விசேட தெரிவுக்குழு
## மீண்டும் இன்று கூடவுள்ளது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட தெரிவுக்குழு மீண்டும் இன்று கூடவுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## அடிப்படைவாதிகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக்குக
### அமைச்சரவையில் அங்கீகாரம்

(கொழும்பு)

அடிப்படைவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்துமாறு நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க....

## சந்தேகத்தை தீர்க்க ராஜினாமா செய்தோம்
### ஐ.தே.க தவிசாளர் கபிர் ஹசீம்

(கொழும்பு)

எங்களின் அமைச்சு பதவிகளை எவரையும் பாதுகாப்பதற்காக

23ஆம் பக்கம் பார்க்க....

## முல்லைத்தீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய முன்றலில்
### பிக்கு தலைமையில் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய முன்றலில் பௌத்த பிக்கு தலைமையில் சிங்களவர்கள் சிலரால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மணலாறுப் பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்ட சிங்களவர்கள் சிலர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு புல்மோட்டை பகுதியிலிருந்தும் பௌத்த பிக்குகள் வருகை தந்திருந்தனர்.

"செம்மலைப் பிள்ளையார்

23ஆம் பக்கம் பார்க்க....

## ரிஷாத்துக்கு எதிரான குற்றத்தை நிரூபித்துக் காட்டுவேன்
### விமல் வீரவன்ச சூளுரை

(கொழும்பு)

"முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபித்துக்காட்டுவேன். அதற்கான

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையின் தற்போதை நிலை இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்து

## இந்திய ஊடகம் செய்தி வெளியீடு

(புதுடெல்லி)

இலங்கையில் பௌத்த முஸ்லீம் சமூகத்தினரிற்கு இடையில் தீவிரமடைந்து வரும் பதட்டநிலையால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாதிப்புகள் ஏற்படலாம் என இந்தியா கருதுவதாக எகனமிக்டைம்ஸ் இந்தியா டைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

மோடி அரசாங்கம் இது குறித்து அச்சமடைந்துள்ளது என எகனமிக் டைம்ஸ் இந்தியா டைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது. இலங்கை முஸ்லீம்கள் மத்தியில் உள்ள அதிருப்தியடைந்த சக்திகள் மற்றும் தீவிரவாதப் போக்குடையோர் குறித்து உன்னிப்பாக அவதானித்து வரும் மோடி அரசாங்கம் கேரளா தமிழ் நாட்டில் உள்ள அவர்களது சகாக்களையும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

இலங்கைக்கான விஜயத்தின்போது இந்திய பிரதமர் சமூகங்களின் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துமாறு இலங்கை தலைவர்களை கேட்டுக்கொள்வார் என தெரிவித்துள்ள எகனமிக் டைம்ஸ் இந்தியா டைம்ஸ் இணையத்தளம் இலங்கையில் தற்போது காணப்படும் நிலைமையின் அதிர்வுகள் இந்தியாவின் தென்பகுதி மாநிலங்களில் பாதிப்பு ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்காகவே மோடி இந்த வேண்டுகோளை விடுப்பார் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் தென்மாநிலங்களில் ஐ.எஸ். அமைப்பின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்காக தீவிரவாத மயப்படுத்தல்களை கட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் நடவடிக்கைகளில் இலங்கையுடன் இந்தியா இணைந்து செயற்படமுடியும் என இந்த விவகாரங்களுடன் தொடர்புடையவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதியுடன் பயங்கரவாத நடவடிக்கைகளை இணைந்து முன்னெடுப்பது குறித்து இந்திய பிரதமர் நரேந்திரமோடி கலந்துரையாடியுள்ளார். (ம-03)


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு தமிழ் ரைப்பிங், பக்க வடிவமைப்பு, Photo Shop தெரிந்த, பழக விரும்பும் ஆண்கள் தேவை. தகுதியானவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம் (7001)
இல.3 , 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்



## 02 வது ஆண்டு நினைவுநாள்



அமரர்
துரைச்சாமி இராமகிருஷ்ணன்

தந்தை இருந்த போது
இழப்புகள் எதுவும் இல்லை
தந்தை இறந்த பின்
இழப்பதற்கு எதுவும் இல்லை

தகவல்: மகன்
கிருஸ்ணராஜ் [ராஜன்]
குடும்பத்தினர்

காந்தி கிராமம், கோணாவில்,
கிளிநொச்சி

(C- 6609)


### புத்தளம் பகுதியில்

# ஐ.எஸ் அமைப்பிற்கெதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்




(புத்தளம்)

புத்தளம், ஆனமடு சங்கட்டிக்குளம் பிரதேசத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சங்கட்டிக்குளம் ஜும்மா மஸ்ஜித்தின் ஏற்பாட்டில் ஜும்மா மஸ்ஜித்திற்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் போது, நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதோடு தீவிரவாத அமைப்புக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஈஸ்டர் தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிராக பல்வேறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

### வவுனியா புதூர் ஆலய

# அம்மன் சிலைக் கண்ணிலிருந்து இரத்தக் கண்ணீர் வடிகிறது



(வவுனியா)

வவுனியாவில் இரத்தக் கண்ணீர் வடிக்கும் அம்மனை பக்கதர்கள் சென்று தரிசித்து வருகின்றனர்.

வவுனியா சுந்தரபுரத்தில் அமைந்துள்ள புதூர் நாக பூசனி மற்றும் நாக தம்பிரான் ஆலயத்தில் உள்ள அம்மன் சிலையின் கண்களில் இருந்தே இரத்தக் கண்ணீர் வழிந்து வருகின்றது.

நேற்று காலை ஆலயத்தின் பூசகரான பெண் ஆலயத்திற்குள் சென்று பார்த்தபோது கருங்கல்லில் செதுக்கப்பட்ட அம்மனின் திருவுருவ சிலையில் இருந்து சிவப்பாக ஏதோ வடிவதை அவதானித்துள்ளார்.

உடனடியாக அதனை துடைத்த அவர் மீண்டும் அவ்வாறு கண்களில் இருந்து வருவதை அவதானித்த நிலையில் ஆலயத்தின் தொண்டர்களை அழைத்து சம்பவத்தினை காட்டியுள்ளார்.

அவர்களும் அதனை துடைத்து பார்த்தபோது மீண்டும் கண்களில் இருந்து இரத்தம் சிந்துவதை அவதானித்த அவர்கள் விசேட பூஜைகளை நடத்திய நிலையில் தகவல் கிராமம் முழுவதும் பரவியது.

இதனையடுத்து நூற்றுக்கணக்கானோர் அம்மனை தரிசிக்க சென்றவண்ணமுள்ளதுடன் அம்மனின் கண்களில் இருந்து இரத்தம் சிந்துவது ஏன் என்ற அச்சம் கிராமத்தவர்கள் மத்தியில் சூழ்ந்துள்ளது. (ம-03)

# இலங்கைப் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படலாம்

### உலக வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

அரசியல் உறுதியற்ற நிலை மற்றும் அரசியல் மாற்றங்களினால் இலங்கையில் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படலாம் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

அத்தோடு சமீபத்திய பாதுகாப்பு தொடர்பான சம்பவங்கள் முதலீட்டாளர்களின் ஆர்வத்தை குறைத்துள்ளதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் நடைபெறும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்கு முன்பு, நாட்டின் அரசியல் தன்மை நம்பிக்கையற்ற விதமாக காணப்படுவதாக உலக வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, அதிகரித்துள்ள பதற்ற நிலை மற்றும் முதலீட்டாளர்களின் அறிக்கையின் பிரகாரம் கடந்த 3 ஆண்டுகளில் உலக பொருளாதத்தில் மந்த நிலை ஏற்பட்டுள்ளதாக உலக வங்கியின் சர்வதேச பொருளாதார விவரங்கள் (2019 ஜூன் மாத) அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# கனடா உயர் ஸ்தானிகர் நேற்று ஆனந்த சங்கரியுடன் சந்திப்பு



கனடாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் நேற்று தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அவர்களை சந்தித்தார். குறித்த சந்திப்பு நேற்று மாலை 6 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலை கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் கனடா நாட்டின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் டேவிட் மக்னொன், தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, கட்சியின் செயலாளர் இரா.சங்கையா மற்றும் அரவிந்தன் உள்ளிட்ட பலர் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

குறித் சந்திப்பு தொடர்பில் வீ.ஆனந்தசங்கரி கருத்து தெரிவிக்கையில்,

நேற்றைய சந்திப்பில் தமிழ், இஸ்லாமிய சமூகங்களிற்கிடையில் நல்லிணக்கம் காணப்பட வேண்டும் என்பது தொடர்பில் அவர் கலந்துரையாடியதாக தெரிவித்தார். சிறுபான்மை சமூகங்களிற்கிடையில் இவ்வாறான ஒற்றுமை காணப்பட வேண்டும் என்பதை அவர் விரும்புவதாகவும் அவர் ஊடகங்களிற்கு தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் இஸ்லாமிய இனங்களிற்கு இடையில் நல்லிணக்கம், ஒற்றுமை காணப்பட வேண்டும் என்பதனை வீ.ஆனந்தசங்கரி அவர்களும் நேற்று ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டிருந்தார். (ம103-312)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை அதிபர்
சேவையின் தரம் I இற்கு
பதவி உயர்வு பெற்றுள்ள
எமது பாடசாலை அதிபர்



திரு.கு.ரவீந்திரன்


அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை

## யாழ்.பல்கலையில் தனித்துவமாக

# சைவ சித்தாந்த பீடம் அமைக்க வேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கை தற்போது நிறைவேறியது

## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட நாள் முதல் சைவ சித்தாந்த பீடம் தனித்துவமாக அமைக்கப்பட வேண்டும் எனப்பலரும் குரல் கொடுத்து வந்தனர்.

அந்த நீண்டகாலக் கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சைவப்பெரியார் சேர்.பொன். இராமநாதன் அவர்களின் பாரிய சொத்தில் உருவான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் இன்று திறந்து வைக்கப்படும் இந்து கற்கைகள் பீடம் அப்பெருமகனின் லட்சியத்துத் கிடைத்த வெற்றி எனலாம்.

அன்னார் சிவனின் பெயரில் கட்டிய பரமேஸ்வராக் கல்லூரி 1974 இல் பல்கலைக்கழகமாகியது.

பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட நாள் முதல் சைவ சித்தாந்த பீடம் தனித்துவமாக அமைக்கப்பட வேண்டும் எனப் பலரும் குரல் கொடுத்தனர்.நீண்ட காலக் கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது.

இப்பீடம் எதிர்காலத்தில் சீரிய முறையில் பல சாதனைகளைச் சாதிக்கவேண்டும் என இந்து மக்கள் சார்பில் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்புதிய பீடம் உருவாகுவதற்கு அயராது உழைத்த பல்கலைக்கழக சமூகத்திற்கு எமது நன்றிகள் உரித்தாகுக. ஈழத்து இந்துப் பாரம்பரியத்தையும் இந்து - தத்துவவியற்றுறையின் எதிர்காலத்தையும் இப்பீடத்தை அலங்கரிக்கும் பீடாதிபதியும் விரிவுரையாளர்களும் மாணவர்களும் காத்துதவ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## முழுநாட்டையும் காட்டிக் கொடுத்த அரசு

# தேசிய நல்லிணக்கத்தைப் பயன்படுத்தி அரசியல் தேவையை பூர்த்தி செய்த ரணில்

### மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**தேசிய நல்லிணக்கம் என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் - சிங்கள இனங்களுக்கிடையில் ஒரு உறுதியான வெறுப்பு நிலையை தனது அரசியல் தேவைக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி விட்டார். இதன் விளைவு எதிர்காலத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதை விடுத்து ஒரு தரப்பின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சித்தமையின் வெளிப்பாட்டை தெளிவாக காண முடிகின்றது என மகிந்த ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல குற்றம்சாட்டினார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரையும் பதவி விலகுமாறு எதிர்த்தரப்பினர் ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. இவர்கள் பதவி விலகியது அவர்களது தனிப்பட்ட விருப்பமாகும். இவர்களின் செயற்பாட்டின் ஊடாக நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியை தெளிவாக வழங்கியுள்ளார்கள். அதாவது குற்றம் சாட்டப்படுபவர் பயங்கரவாதியாக இருந்தாலும் பரவாயில்லை அவர் என் இனம் ஆகையால் நாம் பாதுகாக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மறுபுறம் எதிர்த்தரப்பினர் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் எதிராகச் செயற்படுகின்றார்கள் என்ற தவறான கருத்தினையும் சிறுபான்மை மக்கள் மத்தியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் இராஜதந்திரத்தினால் அழகுற பதிவிட்டு விட்டார். முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவாக விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருந்தால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்பட்டிருக்காது. முறையான ஒரு தீர்வை எட்டியிருக்கலாம். ஒரு தனிநபரை பாதுகாப்பதற்காக அரசாங்கம் இன்று நாட்டைக் காட்டிக் கொடுத்து விட்டது என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)

# கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் முதலமைச்சர் ஷான்



(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநராக ஷான் விஜயலால் டி சில்வா ஜனாதிபதியால் நேற்று நியமிக்கப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் எழுந்த சர்ச்சைகளைத் தொடர்ந்து கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த ஹிஸ்புல்லா தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இந்நிலையில் வெற்றிடமாக இருந்த குறித்த பதவிக்கு நேற்று ஷான் விஜயலால் சில்வா நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி அவருக்கு நியமனக்கடிதத்தை வழங்கினார். ஷான் விஜயலால் டி சில்வா தென் மாகாண முதலமைச்சராக பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழு பூஜித, ஹேமசிறிக்கு அழைப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்னிலையாகுமாறு பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

அந்தவகையில் இன்று வியாழக்கிழமை பூஜித ஜெயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரை முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

ஏப்ரல் -21 பயங்கரவாதத் தாக்குதல் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்னவின் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரண்டாவது தடவையாக கூடியது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜெயம்பதி விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஆகியோரை இந்த வாரம் முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இருப்பினும் பொலிஸ்மா அதிபர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்களிடம் முதலில் சாட்சியங்களைப்பெறுவது சிறந்தது என்று ஆணைக்குழு தீர்மானித்தது என்றும் சுட்டிக்காட்டிய அவர் இதன் காரணமாகவே அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதுவரை பாதுகாப்பு செயலாளர் சாந்த கோட்டேகொட தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி டி.ஐ.ஜி. சிசிர மெண்டிஸ் மற்றும் நாலக டி சில்வா ஆகியோரிடம் சாட்சியம் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார் ரத்ன தேரர்

(கண்டி)

கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்.

நான்கு நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை வைத்தி யசாலையிலிருந்து அவர் வெளி யேறினார்.

குறித்த வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த அத்துரலிய ரத்ன தேரர் நேற்றுக்காலை பிக்



குகள் சிகிச்சை அறையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவரது விருப்பத்திற்கு அமைய வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார். (இ-7)

# சிறுவர்களைப் போல விளையாடுகிறார்கள் இலங்கை வீரர்களை திட்டித் தீர்த்த டில்சான்

இலங்கை அணியின் நடுவரிசை வீரர்கள் துடுப்பாட்டத்தின் போது சிறுவர்களை போல விளையாடுகிறார்கள் என ஜாம்பவான் தில்ஷன் விமர்சித்துள்ளார். உலகக்கிண்ண தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இதில் முதலில் ஆடிய இலங்கை 201 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. பின்னர் ஆடிய ஆப்கானிஸ்தான் 152 ரன்களுக்கு ஆல் அவுட்டாகி தோல்வியடைந்தது. இப்போட்டியில் இலங்கை அணியின் நடுவரிசை வீரர்களின் பேட்டிங் மோசமாக இருந்தது.

இது தொடர்பாக பேசிய இலங்கை அணியின் ஜாம்பவான் தில்ஷன், நடுவரிசை வீரர்கள் இந்தமுறையும் பொறுப்புடன் விளையாடவில்லை. சில சமயங்களில், சிறுவர்கள் போல நடுவரிசை வீரர்கள் நடந்துகொள்கிறார்கள். பேட்டிங் செய்கிற போது அப்படித்தான் நடந்துகொள்கிறார்கள்.

குசல் பெரேரா எப்படி எளிதாக ஆடினார் என்பதை பார்த்தோம். இயல்பாக விளையாடி, பந்துவீச்சாளர்களுக்கு அழுத்தம் அளித்தார். உதானா மோசமான ஷாட்டால் ஆட்டமிழந்தார். அவர் குசலுக்கு ஆதரவு அளித்திருக்க வேண்டும்.

140/1 என இருந்த ஸ்கோர் 180/8 என மாறியதை நம்பமுடியவில்லை. இந்த சரிவைச் சந்தித்ததற்கு நான் நடுவரிசை வீரர்களைத் தான் குறை கூறுவேன் என கூறியுள்ளார்.



# இலங்கை ரசிகர் வினோத போராட்டம்

இலங்கையில் அந்த நாட்டு கிரிக்கெட் ரசிகர் ஒருவர் திடீரென மரத்தில் ஏறி நின்றபடி வித்தியாசமான போராட்டத்தில் குதித்தார்.

'இலங்கை அணி மோசமான நிலைமையில் இருக்கிறது. உலகக் கிண்ண கிரிக்கெட்டில் திசரா பெரேராவை தொடக்க ஆட்டக்காரராக விளையாட வைக்க வேண் டும்.

அப்போது தான் மரத்தை விட்டு கீழே இறங்குவேன்' என்று ஆவேசமாக கூறினார்.

பிறகு அந்த பகுதியில் உள்ளவர்கள் அவரை சமாதானப்படுத்தினர். இந்த வீடியோ காட்சி சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# ஸ்டெயின் விலகலால் தென் ஆபிரிக்கா பரிதாபம்



தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வந்த தென் ஆபிரிக்க அணி வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் (35 வயது), உலக கோப்பை தொடரில் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2016ம் ஆண்டு அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஸ்டெயின், அதன் பிறகும் முழு உடல்தகுதி பெற முடியாமல் தடுமாறி வந் தார். சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் டி20 தொட ரிலும் அவர் இதே பிரச்னை காரணமாக விலகியது குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்க அணி விளையாடிய முதல் 2 போட்டியிலும் விளையாடாத ஸ்டெயின், இந்திய அணியுடன் நேற்று நடந்த போட்டியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப் பட்டது. இந்த நிலையில், ஸ்டெயின் உலகக்கிண்ணத்தில் இருந்தே விலகி உள்ளது தென் ஆபிரிக்க அணியை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. அவருக்கு பதிலாக மற்றொரு வேகப் பந்து வீச்சாளர் பியூரன் ஹெண்ட்ரிக்ஸ் சேர்க்கப் பட்டுள்ளார்.

# இலங்கை அணியால் கவலை

## மகேல உருக்கம்

இலங்கை அணியின் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் கவலை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை ஜம்பவான் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இலங்கை அணி வெற்றி பெற்றாலும், இலங்கை அணியின் நடுத்தர வரிசை துடுப்பாட்டகாரர்கள் மளமளவென சரிந்தனர்.



இதுகுறித்து கவலை தெரிவித்துள்ள ஜெயவர்தன கூறியதாவது, இலங்கை அணியினர் மீண்டும் நடுத்தர வரிசை சரிவை தவிர்க்க வேண்டும் என்றால் இலங்கை துடுப்பாட்டக் காரர்கள் தங்களை சிறப்பாக தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

நடுத்தர வரிசையில் இலங்கை மளமளவென விக்கெட் இழந்தது கவலையளிக்கிறது.

பலர் மிக எளிதாக விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். இலங்கை சிறப்பாக துடுப்பாடி இருக்க வேண்டும் என்பதில் கேள்வியே இல்லை. இலங்கை அணி 250-க்கும் கூடுதலான ஓட்டங்கள் எடுத்திருக்க வேண்டும் என மஹேல ஜெவர்தன தெரிவித்துள்ளார்.

# ரோகித் அசத்தல் ஆட்டம் இந்தியா அபார வெற்றி



இங்கிலாந்தில் நடந்து வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழாவில் 7-வது நாளான நேற்று சவுத்தாம்டனில் நடை பெற்ற 8-வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியனான இந்திய அணி, தென் ஆபிரிக்காவை எதிர்கொண்டு விளையாடியது.

இந்த போட்டியில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. இதையடுத்து இந்திய அணி முதலில் பந்து வீசியது.

50 ஓவர் முடிவில் தென் ஆபிரிக்கா அணி 9 விக்கெட் இழப்பிற்கு 227 ரன்கள் சேர்த்தது. இதையடுத்து 228 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களம் இறங்கியது.

இந்திய அணியின் பேட்ஸ்மேன்களான தவான் மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் களம் இறங்கினர். தவான் மற்றும் விராட் அடுத்தடுத்து ஆட்டமிழக்க சிறப்பாக ஆடிய ரோகித் சர்மா சதம் விளாசினார்.

இவர் 128 பந்துகளில் 2 சிக்சர் மற்றும் 10 பவுண்டரிகளுடன் சதத்தை பூர்த்தி செய்தார். வெற்றியை நோக்கி ஆடிய இந்திய அணி இறுதியில் 47.3 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 230 ரன்கள் எடுத்து தென் ஆபிரிக்கா அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

இந்திய அணியில் ரோகித் 122 ரன்களுடனும், பாண்டியா 15 ரன்களுடனும் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். தென் ஆபிரிக்க அணியின் சார்பில் ரபாடா 2 விக்கெட்டும், கிறிஸ் மோரிஸ் மற்றும் பெலக்வாயோ தலா 1 விக்கெட்டும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ரோகித் சர்மா தேர்வு செய்யப்பட்டார்.

# பௌத்த அடிப்படைவாதமும் மேலாதிக்கவாதமும் தமிழர் தாயகத்தில் தலைவிரித்தாடுகிறது!

## சுரேஷ் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

இஸ்லாமிய அமைச்சர்கள் அனைவரும் கூண்டோடு இராஜினாமா செய்தமை தொடர்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது நிலைப்பாட்டை ஊடக அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளது. இது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

ஐ.எஸ்.ஐ.எஸ்.என்ற இஸ்லாமிய அடிப்படைவாத பயங்கரவாத சக்தியினால் இலங்கையில் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய அடிப்படை வாதத்தை வேரறுக்கிறோம் என்ற கருத்தினூடாக பௌத்த அடிப்படைவாதம் என்பது கோலோச்சுகின்ற ஒரு சூழலை அரசும் எதிர்த்தரப்பும் இப்பொழுது ஏற்படுத்தியிருக்கின்றது. இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தின் காரணமாக இவை எல்லாமே உடனடியாக ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டது.

ஆனாலும் மூன்று வாரங்கள் கழித்து, திட்டமிட்ட வகையில் முஸ்லிம் சமூகத்தின் மீது சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளால் வன்முறை ஏவிவிடப்பட்டது. அவர்களது வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டன. ஒருவர் கொல்லப்பட்டார். இஸ்லாமிய சகோதரர்கள் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டனர். முஸ்லிம் அடிப்படைவாதிகளால் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக அதற்கு ஒரு அரசியல் பின்புலம் இருக்கின்றதென்றும் அதற்கு ஒருசில அமைச்சர்கள், ஆளுநர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்றும் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டது. அதனை அவர்கள் மறுத்தபோதும் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தும் பலரால் முன்வைக்கப்பட்டு வந்தன.

இத்தகைய ஒரு சூழலில்தான் பாராளுமன்ற உறுப்பினரான ஒரு பௌத்தபிக்கு, அமைச்சர் றிசாத் பதியுதீன், ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோரை பதவியிலிருந்து விலக்கும் படிக் கோரி சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். அவரது கோரிக்கைக்கு ஆதரவாக சிங்கள அடிப்படைவாதிகளால் மக்கள் அணிதிரட்டப்பபட்டனர்.

கலவரங்கள் உருவாவதற்கான சாத்தியப்பாடுகள் தோன்றின. அவரது உண்ணாவிரதத்தை எதிர்க்கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலரும்கூட ஆதரித்தனர். இந்த நிலையை நாங்கள் அவதானிக்கின்றபோது, முழுநாட்டையுமே சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளிடம் அரசு கையளித்து விட்டதோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

ஆறு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்ட ஞானசார தேரருக்கு ஒன்பது மாதங்கள் கடந்த நிலையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு சிறையிலிருந்துவிடுவிக்கப்பட்டார். அவர் வெளியில் வந்த உடனேயே உண்ணாவிரதமிருந்த பௌத்த பிக்குவிற்கு ஆதரவாக செயற்பட்டதுடன், அமைச்சர் றிசாத், ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோரை பதவியிலிருந்து விலக்குவதற்கு அரசாங்கத்திற்கு காலக்கெடுவையும் விதித்திருந்தார். அவ்வாறு செய்யாவிடின் பாரிய விளைவுகள் ஏற்படும் என்ற எச்சரிக்கையையும் விடுத்திருந்தார். இவர்களது இந் நடவடிக்கைகள் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் கொதிநிலை உருவாகி அது இஸ்லாமிய மக்களுக்கு எச்சரிக்கையாகவும் அச்சுறுத்தலாகவும் மாறியது. இந்த நிலையில்தான் இஸ்லாமிய அமைச்சர்கள் ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்வதனூடாக பௌத்த அடிப்படைவாதிகளின் போக்கை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறலாம்.

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பௌத்த அடிப்படைவாதமும் மேலாதிக்கவாதமும் வடக்கு-கிழக்கிலும் இன்று மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியிருப்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்துக்களின் கோவில்கள் உடைக்கப்பட்டு அங்கு பௌத்த வழிபாட்டுத் தலங்கள் உருவாக்கப்படுவதும் இதற்கு ஆதரவாக அரசாங்கமும் பொலிஸும் இராணுவமும் தொல்பொருள் திணைக்களமும் செயற்படுவதும் இப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

பௌத்த அடிப்படைவாதம் தமிழ் மக்களின் மீது ஏவிவிடப்பட்ட போதும் தமிழ் மக்களுக்குப் பல்வேறுவழிகளில் இன்னல்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் முஸ்லிம் தலைமைகள் மௌனிகளாக அதனைப் பார்த்துவந்தனரே தவிர, அரசுக்கு எதிராகவோ அரசின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராகவோ என்றுமே வாய்திறந்தது இல்லை. அதுமாத்திரமல்ல, ஜெனிவாவரை சென்று தமிழ் மக்கள் மீது இன அழிப்பு நடத்தப்படவில்லை, தமிழ் மக்கள் பெரிய அளவில் கொல்லப்படவில்லை என்று சிங்கள பேரினவாத அரசாங்கத்தை பாதுகாப்பதில் முன்னின்று உழைத்தவர்கள்தான் இவர்கள்.

பயங்கரவாதிகளை கைது செய்வது என்பது வேறு. ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் அச்சுறுத்துவது என்பதும் அடிமைப்படுத்துவது என்பதும் வேறு. இஸ்லாமிய அடிப்படைவாதத்தைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் முஸ்லிம் சமூகத்தை நசுக்குவதற்கு இடமளிக்க முடியாது. அதேபோன்று பௌத்த அடிப்படைவாதிகளின் கைகளில் சட்டம் ஒழுங்கை ஒப்படைக்கவும் இடமளிக்க முடியாது. முஸ்லிம் அமைச்சர்கள் கூண்டோடு இராஜினாமா செய்தமை சில சமயங்களில் அவர்களின் எதிர்கால பாராளுமன்ற தேர்தல்களுக்கு வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு யுத்தியாகவும் இருக்கலாம்.

எனினும் உண்மையில் சிறுபான்மை தேசிய இனங்கள் இந் நாட்டில் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அவர்கள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டுமென்பதும் பெரும்பான்மையுடன் சேர்ந்து சலுகைகளுக்கு அடிமைப்பட்டால் தமது ஒட்டுமொத்த சமூகத்தின் பாதுகாப்பையும் இருப்பையும் இழக்க நேரிடும் என்பதையும்கள யதார்த்தங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதனை இஸ்லாமிய தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அமைச்சர்கள் மங்கள,ராஜிதவுக்கு விகாரைகளுக்குள் நுழையத் தடை





(கம்பஹா)

மகா சங்கத்தினரை அவமானப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதாகத் தெரிவித்து, அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர் சதுர சேனாரத்ன ஆகியோருக்கு கம்பஹா மாவட்டத்திலுள்ள எந்தவொரு விகாரைக்குள்ளும் நுழைய அனுமதியளிக்கப்படாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா சாசன பாதுகாப்புச் சபையின் விகாராதிபதிகளின் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது. (இ-7)

## இராசி பலன்

**மீனம்**: தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**மேடம்**: சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்**: உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்**: இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**கும்பம்**: பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், மறைமுக போட்டிகள் மாறும்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, சுக் | செவ்,புத ராகு,சந் |
| | இராசி பலன் கிரகநிலை | | |
| | | | |
| சனி, கேது | குரு | | |

சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்

**28.05.2019**

வைகாசி 23, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

திருதியை முற்பகல் 11.46 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 10.29 மணிவரை

சுபநேரம் 7.22 - 8.52 மணிவரை

இராகுகாலம் 1.22 - 2.52 மணிவரை

சதுர்த்தி விரதம், சுபமுகூர்த்தம்

வளவன்

**கடகம்**: வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வெளியூர் பயணமொன்றால் கையிருப்பு கரையலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்**: சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நிம்மதி காண ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**சிம்மம்**: மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எதிர்பாராத வகையில் சில காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்**: சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**: எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய முயற்சிகள் கைகூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி**: செல்வ நிலை உயரும் நாள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், போசன சுகமுண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

# வடக்கில் தேவைக்கு மேலதிகமாக அதிகரித்துவரும் மோட்டார் வாகனங்கள் குறித்து எச்சரிக்கை அவசியம்

## சூழல் தினநிகழ்ச்சியில் ஐங்கரநேசன்





(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் பின்னர் வடக்கு மாகாணத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. கடந்த 2018 ஆம் ஆண்டு வட மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஏறத்தாழ இரண்டே முக்கால் இலட்சம் மோட்டார் வாகனங்கள் வாகன வரி செலுத்தியுள்ளன. இவை தவிர, வேறு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்ட பெருந்தொகையான வாகனங்களும் வடக்கில் பயன்பாட்டில் உள்ளன. காற்றை மாசுபடுத்துவதில் பெற்றோலிய எரிபொருட்களில் இயங்கும் மோட்டார் வாகனங்கள் பெரும்பாங்கு வகிப்ப தால், வடக்கில் தேவைக்கு மேலதிகமாக அதிகரித்துவரும் மோட்டார் வாகனங்கள் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வேலணை மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிபர் சி. கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காற்றில் கலந்துவரும் மாசுக்கள் காரணமாக ஆண்டு தோறும் 7 மில்லியன் பேர் வரையில் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த மரணங்களில் பெரும் பங்கு ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயே நிகழ்கின்றன. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டே இந்த ஆண்டு சூழல் தினத்துக்கான கருப்பொருளாகக் 'காற்று மாசுபடுதலைத் தோற்கடிப்போம்' என்பது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

காற்று மாசுபாட்டால் இறக்கின்றவர்களில் அரைவாசிப்பேர் பெற்றோலிய எரிபொருட்களில் இயங்கும் வாகனங்களில் இருந்து வெளியேறுகின்ற புகை மாசுக்களாலேயே உயிர் துறக்கின்றனர். இதனால் வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் நாடுகளில் மின்சாரத்தில் இயங்குகின்ற மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகின்றன. அதே சமயம், பெற்றோலிய வாகனங்களை அதிக எண்ணிக்கையில் ஏற்றுமதி செய்தும் வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் யாழ் மாவட்டத்திலேயே மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. 1,58,358 மோட்டார் வாகனங்கள் யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டில் வாகன வரி செலுத்தியுள்ளன. இவற்றில் 1,25,910 மோட்டார் சைக்கிள்களாகும். மோட்டார் சைக்கிள் என்பது தேவை என்பதை விட இன்று இளைஞர்களின் அந்தஸ்தின் அடையாளமாக உள்ளது. அநேகமான வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களை வைத்திருக்கிறார்கள்.

நாம் தினமும் சுமார் 15 லீற்றர் வளியைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். எமது நுரையீரலின் காற்றுப்பைகளை சுத்தமான காற்றால் நாங்கள் நிரப்ப வேண்டும் என்றால் மோட்டார் வாகனங்களின் தேவையற்ற பயன்பாட்டை அறவே தவிர்க்க வேண்டும். துவிச்சக்கர வண்டிகளில் பயணிக்கக்கூடிய தூரத்தையாவது மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தாது துவிச்சக்கர வண்டியில் கடக்கவேண்டும். சுற்றுச்சூழலுக்கும், உடல் நலத்துக்கும் ஆரோக்கியமான வாகனம் துவிச்சக்கரவண்டிகள் மாத்திரம் தான் என்றும் அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்ச்சியின் நிறைவில் பாடசாலை வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (இ-7)

# தேர்தல் திணைக்களத்தால் விழிப்புணர்வு நிகழ்வு

(சாவகச்சேரி)

வாக்காளர் தினத்தையொட்டி ஒரே நாளில் வாக்காளர் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜே/301 கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்றது.

தேர்தல் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய இடம்பெற்ற இவ் விழிப்புணர்வு நிகழ்வில் கோவிற்குடியிருப்பு கிராம சேவகர் கார்த்திகேயன் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டினர்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொள்ளத் தவறியவர்கள் கிராம சேவையாளர் அலுவலகத்தில் தமக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் 18வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (5-30)

# யாழில் இப்தார் தொழுகை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மர்யம் ஜும்ஆ மஸ்ஜித்தின் ஏற்பாட்டில் நேற்று காலை 6.45 மணியளவில் மஸ்ஜித்திடலில் நோன்புப் பெருநாள் தொழுகை மௌலவி எம்.ஏ.பைசல் (மதனி) தலைமையில் இடம்பெற்றது. தொழுகையைத் தொடர்ந்து மௌலவி எம்.ஏ.பைசலின் (மதனி) நோன்புப் பெருநாள் விசேட உரை (பிரசங்கம்) இடம்பெற்றது. நேற்றைய பெருநாள் தொழுகையில் யாழ்.வாழ் முஸ்லிம்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். மேலும் யாழ்ப்பாணத்தில் நகர்ப்புற முஹூதீன் ஜும்ஆ மஸ்ஜித், முஸ்லிம் வட்டாரம் சின்ன மொஹிதீன் பள்ளிவாசல், முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜித் மற்றும் அபூபக்கர் ஜும்ஆ மஸ்ஜித் ஆகிய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5-9)




# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையில் இந்துசமயப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)

# நள்ளிரவில் வீதியில் நின்ற நால்வர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணத்தில் நள்ளிரவு வேளையில் வீதியில் நின்றனர் என்ற குற்றச்சாட்டில் நால்வரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையில், யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் வீதியில் சந்தேகத்திற்கு இடமாக நால்வரும் நின்றுள்ளனர்.

விசாரணைகளை மேற்கொண்ட போது, உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினால், கண்டியைச் சேர்ந்த இரண்டு சிங்கள இளைஞர்களும், நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் மற்றும் தமிழ் இளைஞர் ஒருவருமாக நான்கு பேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 27 வயது முதல் 30 வயதுடையவர்கள் என்றும், கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாகவும், விசாரணையின் பின்னர், யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றதாகவும் யாழ்ப்பாணப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5-10)

# சந்தையை குத்தகைக்கு வழங்குவது குறித்த சபைத் தீர்மானம் இன்று மீள்பரிசீலனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்கும் சபைத் தீர்மானத்தை வியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக மீள் பரிசீலனை செய்யும் விசேட கூட்டம் இன்று வியாழக்கிழமை நகர சபையில் இடம்பெறும் என சாவகச்சேரி நகர சபையினர் தெரிவித்தனர். சாவகச்சேரிப் பொதுச்சந்தையை குத்தகைக்கு வழங்கும் நகர சபையின் தீர்மானத்தைக் கண்டித்து சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் கடையடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நகரசபையினர் வியாபாரிகளின் கோரிக்கைக்கு அமைவாக கடந்த திங்கட்கிழமை சபையை அவசரமாகக் கூட்டி தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்து கூட்டம் நிறைவடைந்ததும் பிற்பகல் 2 மணிக்கு எமது முடிவை உங்களுக்கு தெரிவிப்போம் என வாக்குறுதியளித்திருந்தனர்.

இருப்பினும் கடந்த திங்கட்கிழமை சபை கூடுவதில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக இன்று வியாழக்கிழமை சபை கூடித் தீர்மானம் மீள் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மீள் பரிசீலனையின் போது சபை உறுப்பினர்கள் தமது முடிவை மாற்றும் பட்சத்தில் சந்தை குத்தகைக்கு வழங்குவது தவிர்க்கப்பட்டு வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்களின் கோரிக்கையும் வெற்றியடையும்.

ஈ.பி.டி.பி, சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. மற்றும் சுயேட்சை உறுப்பினர்கள் தமது முடிவை மாற்றும் பட்சத்தில் வியாபாரிகளின் கோரிக்கை நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் சந்தையைக் குத்தகைக்கு வழங்குவதா? இல்லையா? என இறுதியாக நடந்த வாக்கெடுப்பின் போது குத்தகைக்கு வழங்க வேண்டும் என 14 உறுப்பினர்களும் வழங்கக்கூடாது என நான்கு உறுப்பினர்கள் மாத்திரம் வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பல வருடகாலமாக குத்தகைக்கு வழங்கப்படாத சாவகச்சேரி பொதுச் சந்தை நகர சபையின் கைகளை மீறிச் சென்றுவிடுமோ என்ற ஏக்கம் பலர் மனங்களிலும் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5-30)

# சமூக சேவையாளருக்கான உயர் விருது

(யாழ்ப்பாணம்)

கதிர் தொலைக்காட்சி வழங்கும் சமூக சேவையாளருக்கான உயர்விருது துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டப உரிமையாளர் வடிவேலு சந்தரசேகரத்திற்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நெல்லியடி கதிர் தொலைக்காட்சி கலையகத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு வாரமும் ஆன்மீகம் கல்வி கலை வளர்ச்சிக்காக சேவையாற்றியவர்களும் கௌரவிக்கப்படவுள்ளதாக கதிர் தொலைக்காட்சியின் பணிப்பாளரும் ஓய்வுநிலை அரசாங்க அதிபருமான உடுவை எஸ்.தில்லை நடராசா அறிவித்துள்ளார். (இ-7)

# தமிழ்த் தலைமைகளின் இன்றைய நிலை போலவே இந்த நாடும் இருக்கின்றது



## நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு

இதுவரை காலமும் தமிழ் மக்களின் நலன்கள் சார்ந்து செயற்படாமல், கிடைத்த சந்தர்ப்பங்களை நாசமாக்கிவிட்டு இனி மேல் தான் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பாகச் சிந்தித்து நிதானதாகச் செயற்படப் போவதாகக் கூறுகின்ற தமிழ்த் தலைமைகளின் இன்றையநிலைமைபோலவே இருக்கின்றது இந்த நாடும், நாட்டின் அனைத்துத் துறைகளும் என்றே கூற வேண்டியிருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபை தொடர்பிலான திருத்தச் சட்டமூலம் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வளவு காலமும் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் தாங்கள் சிந்தித்துச் செயற்படவில்லை என்பதை இப்போதாவது இந்தத் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக் கொண்டுள்ளன. அதேபோன்று இந்தத் தமிழ்த் தலைமைகளை நம்பி அழிவுகளின் பால் போயுள்ள தமிழ் மக்களைப் போன்றே இந்த நாட்டின் அழிவுகளின்பால் போயுள்ள ஏனைய அனைத்துத் துறைகளையும் கட்டியெழுப்புவது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டிய ஏற்பாடுகள்தேவை என்பதை இங்கு வலியுறுத்துவதுடன் அந்த ஏற்பாடுகள் இந்தத் தமிழ்த் தலைமைகளின் வெறும் வாய்வார்த்தைகளாக மாத்திரம் இருந்து விடாமல், செயற்பாட்டு ரீதியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

தேயிலை உற்பத்தி சார்ந்த தொழிற்றுறையில் ஈடுபட்டிருக்கின்ற மலையக மக்கள் தொடர்பில் உரிய அவதானங்கள் செலுத்தப்படாத நிலைமையும் தொடர்ந்து கொண்டே இருப்பதையும் காண்கின்றோம். தொழில் இடங்களில் அவர்கள் பல்வேறு இடையூறுகளுக்கு உட்படுகின்றனர். ஊதிய ரீதியில் இன்னமும் மிகவும் பின்தள்ளப்பட்டே வைக்கப்பட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை பல்வேறுபட்ட வடிவங்களில் ஆராய்வது, தொழில் பற்றாக்குறையை தவிர்த்தல், தொழில் வினைத் திறனை மேம்படுத்தல், கல்வி ஒத்துழைப்பு தொடர்பில் ஒப்பந்தம் ஒன்று மிச்சிகன் Michigan பல்கலைக்கழகத்திற்கும் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட இருந்ததாக கடந்த வருடத்தில் அறியக் கிடைத்திருந்தது. அதன் இன்றைய நிலை என்ன என்பது பற்றி அறிய விரும்புகின்றேன்.

குறிப்பாக, தோட்டத் தொழிலாள மக்களின் வாழ்க்கை நிலை மேம்படுத்தப்பட்டால், அவர்களது சமூக, பொருளாதார நிலை மேம்படுத்தப்பட்டால், வினைத்திறன் ரீதியில் அவர்களது உழைப்பினை மேலும் பெற இயலும் என நினைக்கின்றேன். 50 ரூபா ஊதிய அதிகரிப்பொன்று அவர்களுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்பட்டது. இன்று அதைப்பற்றி எந்தக் கதையுமே கிடையாது.

இன்றும் கூட குளவிக் கொட்டுகள் உள்ளிட்ட பல்வேறு மிருகங்களின் அச்சுறுத்தல் நிலைமைகளுக்கு மத்தியில் தொழில் செய்கின்ற நிலையிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய சூழலை ஏற்படுத்துவது அவசியமாகின்றது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேநேரம், தொடர்ந்தும் தேயிலையை வெறும் மூலப் பொருளாகவே ஏற்றுமதி செய்து கொண்டிருக்காமல், பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாக ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் தேவை என்பதையும் அவதானத்தில் கொள்ள வேண்டும். அதாவது, 'உடனடி தேநீர்' தொடர்பில் உலகில் பாரிய கேள்விகள் இருப்பதாகவே தெரிய வருகின்றது.

தேயிலை ஏற்றுமதியில் இன்று நாம் பல நாடுகளுடன் போட்டி போட வேண்டியுள்ளது. அதற்கேற்பவே எமது உற்பத்தியின்தரத்தினை மேம்படுத்துவதற்கும் பெறுமதி சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அயலக இந்தியாவைப் பொறுத்த வரையில் தேயிலையுடன் பல்வேறு மருத்துவப் பொருட்கள் சேர்க்கப்பட்ட ஆரோக்கிய பானங்கள் தயாரிக்கப்பட்டு, சந்தையிலே பிரபலமாகியுள்ளன. இலங்கையில் கூட ஒரு சில தனியார் துறையினர் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் அதற்கான ஊக்குவிப்புகள் மற்றும் கண்காணிப்புகள் என்பன தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தற்போதுகூட இந்த நாட்டின் தேயிலைக் கைத்தொழிலானது முழுமையாகவே தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏலம் விடுவோர் போன்ற அரசுக்கு அப்பாற்பட்ட துறையினரின் மூலமாகவே கையாளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற நிலையில், இதில் உடனடி மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். அத்தகைய தொரு நிலை வரும்வரையில், இலங்கைத் தேயிலையின் தரம் தொடர்பில் உறுதியிட முடியாத நிலை தொடர்வதைத் தவிர்க்க முடியாது என்பதையும்வலியுறுத்துகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பழைமை வாய்ந்த

### ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-23, சீனியர் ஒழுங்கை ஆதன இல. 81 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் V.ஆறுமுகம் பெண் சறோஜினி என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை இல. 4/2 சிறிசோமநாத வீதி, நெடிமல் தெஹிவளையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் விஜயலட்சுமி (ஆறுமுகம் மகள்) பிரசித்த நொத்தாரிசு எஸ். பகீரதன் முகதாவில் 16.09.2016 ஆம் திகதியிட்டு 4316 ஆம் இலக்கத்தில் நிறை வேற்றப்பட்ட வெளிப்படுத்தல் ஆட்சி உறுதியில் 18.04.1983 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வை.எஸ்.செந்தில்நாதன் முகதாவில் 2781 ஆம் இலக்க அறுதி உறுதியின் மூலம் தனது தாயாரான வினாசித்தம்பி ஆறுமுகம் பெண் சறோஜினிதேவியின் ஆதன மாக இருந்த முழு ஆதனத்தில் ஒரு பகுதியான இதன் பின்னகத்தான ஆதனத்தினை தனக்கு நன்கொடை அளிக்க உறுதியளித்திருந்தார் என்றும் எனினும் நாட்டுச்சூழ்நிலை காரணமாக குறித்த நன்கொடை உறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் குறித்த ஆதனத்தை தான் 1990 ஆம் ஆண்டிலிருந்து (36 ஆண்டுகளுக்கு மேலாக) ஆட்சி செய்து வருவதாகவும் வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் பிரசித்த நொத்தாரிசு எஸ். பகீரதன் முகதாவில் 16.09.2016 ஆம் திகதியிட்டு 4317 ஆம் இலக் கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் விக்னேஸ்வரன் டிலருஜனிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "வெள்ளுவையடி" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் E.தனபாலசிங்கம் அவர்களின் வரைபட இலக்கம் 232/21.05.1987 இல் துண்டு 2 எனச் சுட்டப்பட்டு விஸ்தீரணம் 10.91 குளி கொண்ட ஆதனம். இதன் எல்லை

கிழக்கு:- T. சிவலிங்கத்தின் ஆதனம்
வடக்கு:- சீனியர் ஒழுங்கை
மேற்கு:- நில அளவைப்பட இல.232 இன் துண்டு-1 எனக் குறிப்பிட்ட ஆதனம்.
தெற்கு:- புஸ்பரட்ணத்தின் ஆதனம் இதிலுள்ள கிணற்றில் அரைப்பங்கும், இதனடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை விக்னேஸ்வரன் டிலருஜன் தமது பெயரிற்கு பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது விக்னேஸ்வரன் டிலருஜன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மானுவல் ஆனல்ட்
முதல்வர், மாநகர சபை.

(C-6608)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 46 ½ சூரி செவ் 8 இல்<br>உயரம்: 177cm<br>தகைமை/தொழில்: BA, MA ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மணமகன் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/9751 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.Sc பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer, Land Survior, Banker, QS (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/9768 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் BIT பட்டதாரி,முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: A/L,பட்டதாரி அரசதனியார் உத்தியோகம் (உள்நாடு)<br>தொ.இ: B/9752 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 43 ¼ செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/9770 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L,தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9753 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L,தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு<br>தொ.இ: G/9771 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 57செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L,தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/9754 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 64 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்B.Sc, HNDM, Admin Assistant<br>எதிர்பார்ப்பு: தகுந்தவரன் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/9773 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தியாகி பொன்.சிவகுமாரனின் 45வது நினைவுதினம் அனுஷ்டிப்பு







(யாழ்ப்பாணம்)

தியாகி பொன்.சிவகுமாரனின் 45ஆவது நினைவுதினம் நேற்று உரும்பிராயில் நடைபெற்றது.

உரும்பிராய் பொதுச்சந்தையிலுள்ள அவரது நினைவிடத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.


அதனைத்தொடர்ந்து உரும்பிராய் வேம்படி மயானத்தில் உள்ள நினைவுத் தூபியிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது முதலில் ஒருநிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதன்பின்னர் ஈகச்சுடரை தியாகி சிவகுமாரின் சகோதரி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அன்னாரின் ஒளிப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களாக எம்.கே. சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன், பா.கஜதீபன், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட முன்னோடிகளில் ஒருவரான பொன். சிவகுமாரன் 1974 ஆம் ஆண்டு கோப்பாய் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் சயனைட் அருந்தி தற்கொலை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசே திருட்டு வேலையில் ஈடுபடும்போது திருடனை எப்படி கண்டுபிடிப்பது-ரில்வின்



(பொலநறுவை)

ஊழல் குற்றச்சாட்டுக்களில் அரசாங்கத் தரப்பினரே நேரடியாக ஈடுபடும்போது திருடனை அவர்கள் எவ்வாறு கண்டுபிடிப்பார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கேள்வியெழுப்பினார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

"நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒகஸ்ட் மாதத்துடன் 4 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. ஆனால் இந்தக் காலப்பகுதியில் மக்களுக்கான எந்தவொரு சிறந்த திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை.

இவ்வாறு நாட்டில் ஊழலை ஒழிப்பதாக கூறி, ஆட்சிக்கு வந்த அரசே பல ஊழல், குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டுள்ளது.

அதற்கு சிறந்த உதாரணம் தான் மத்திய வங்கி நிதி மோசடியாகும்.

இதேவேளை, மகிந்தவின் ஆட்சியில் அதிகளவு ஊழல் இடம்பெற்றுள்ளதாகவும் அவ்வாறு ஊழலில் ஈடுபட்ட திருடர்களை மக்கள் முன் நிறுத்துவதாகவும் கூறினார்கள்.

ஆனால் இதுவரை ஒருவரையாவது இந்த அரசாங்கம் அடையாளம் காட்டியுள்ளதா?

இவ் விடயத்தில் முறையாக விசாரணைகளை முன்னெடுத்து நீதியை நிலைநாட்ட அரசாங்கம் தவறியுள்ளது.

மேலும் ஊழல் குற்றச்சாட்டுக்களில் இந்த அரசாங்கம் ஈடுபடுகின்றமையால் அதனைத் தடுக்கும் நடவடிக்கையை அவர்கள் ஒருபோதும் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதுடன் தண்டனையையும் பெற்றுக்கொடுக்கவும் மாட்டார்கள்" என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# தீய சக்திகளின் பிடிகளிலிருந்து உண்மையான விடுதலை வேண்டும்

## ஆளுநர் முஸம்மில் பிரார்த்தனை

(கொழும்பு)

தீய சக்திகளின் பிடிகளில் இருந்து நாட்டுக்கும், சமூகத்துக்கும் உண்மையான விடுதலையை வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும் என புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மேல் மாகாண ஆளுநர் மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

ஈகைத்திருநாளை முன்னிட்டு அவர் நேற்றுப் புதன்கிழமை அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.



"சர்வதேச முன்னெடுப்புக்களாலும் எமது சமூகத்தின் வழி தவறிய சில இளைஞர்களின் மிலேச்சத்தனமான செயற்பாட்டினாலும் அதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்த முனையும் சில சக்திகளாலும் இக்கட்டான ஒரு சூழலில் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இலங்கை முஸ்லிம்களாகிய நாம் ஈதுல் பித்ர் பெருநாளை கொண்டாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் மனம் தளர்ந்து விடாமல் பெருநாளை மிக எளிமையாகக் கொண்டாடுவோம்.

பெருநாள் தொழுகையோடு எமது கொண்டாட்டங்களை முடித்து கொண்டு நாட்டுக்கும், சமூகத்துக்கும் தீய சக்திகளின் பிடிகளில் இருந்து உண்மையான விடுதலையை வேண்டிப் பிரார்த்திப்போம்.

இலங்கையில் நல்லதொரு எதிர்காலத்துக்கு அடுத்து வரும் காலங்களில் உழைக்க முன்வருவோம்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதி வேட்பாளர் குறித்து

# சு.கவுடன் கலந்துரையாடியமை காலத்தை வீணடித்த செயல்

## மகிந்த அணி விரக்தி

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு போதும் மகிந்த அணிக்கு ஆதரவு வழங்கமாட்டார் என்பது யாவரும் அறிந்த விடயம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் பரந்துபட்ட கூட்டணியமைப்பதாக முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் பேச்சுவார்த்தை களும் காலத்தை வீணடித்த ஒரு செயற்பாடாகும் எவரது ஆதரவு இல்லாமலும் பொதுஜன பெரமுனவால் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறமுடியும் என பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் பரந்துபட்ட கூட்டணியமைத்தல் தொடர்பில் நான்கு கட்ட பேச்சுவார்த்தைகள் முன் னெடுக்கப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித இணக்கப்பாடுகளும் இரு தரப்பிலும் இருந்து எட்டப்படவில்லை. பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை எக்காரணங்களுக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது என்பதில் பொதுஜன பெரமுனவின் அனைத்து உறுப்பினர்களும் உறுதியாகவே உள்ளோம்.

எனவே இனியும் கூட்டணியமைத்தல் தொடர்பில் இரு தரப்பிலும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது பயனற்றதொரு விடயம். கடந்த காலங்களில் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகள் அனைத்தும் காலத்தை வீணடித்த ஒரு செயற்பாடு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திறன்வகுப்பறை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கயற்கரசி வித்தியாலய திறன் வகுப்பறைத் திறப்பு விழா, இன்று 6 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ்.அன்ரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இத் திறன் வகுப்பறை இங்கிலாந்து வீணாலயா நிறுவுநரும் பழைய மாணவியுமான திருமதி சிவதாரணி சகாதேவனின் அனுசரணையில் அமைக்கப்பட்டது. (5)

# கலாசாரப்பேரவை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலைஞர்கள், கலைமன்றங்களின் பிரதிநிதிகள், கலை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். (5)

# முதியோர்களுக்கான மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/62, ஜே/63 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள முதியோர்களுக்கான மருத்துவ முகாம் நாளை 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலில் நடைபெறும்.

இம் மருத்துவ முகாமில் பங்குபற்ற வருபவர்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)

# "கொற்றவை" இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பூவன் மீடியாவின் "கொற்றவை" இசை இறுவெட்டு வெளியீடு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் திவ்யமஹால் (தட்டா தெரு சந்தி) மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இசைவாணர் கண்ணன் கலந்து கொள்வார். (5)

# யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடமும் சைவசித்தாந்தத்துறையின் ஆரம்பமும்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 11 ஆவது பீடமாக இந்துக் கற்கைகள் பீடம் அமைந்திருப்பதானது மிகவும் மனதிற்கு ஆனந்தமான விடயமாகும். இந்து நாகரிகத்துறை தனித்துறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 45 வருடங்கள் ஆகின்றன.

இந்துப் பீடம் ஒன்று பல்கலைக்கழகத்தில் அமைய வேண்டும் என்ற வேணவா இந்து நாகரிகத்துறையில் முதல் தலைவராக விளங்கிய பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களின் ஆத்மார்த்தமான ஆவலாகும். பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையவர்களும் இத்தகைய பீடம் ஒன்று அமைவதன் அவசியத்தை அடிக்கடி பல கலைப்பீட கூட்டங்களில் வற்புறுத்தி வந்துள்ளமையும் இங்கு நினைவுகூரற்பாலது.

தற்போது இந்து கற்கைகள் பீடம் அமைவதற்கான முழுமுயற்சிகளையும் அதன் முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணனும் ஏனைய துறைத் தலைவர்களும் குறிப்பாக பேராசிரியர் மா.வேதநாதனும் இணைந்து பல வருடங்களாக முன்னெடுத்து வந்ததன் கடும் முயற்சி காரணமாக இப்போது இந்தப் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருப்பது என்னைப் போன்ற இத்துறையில் பணியாற்றிய சகலருக்கும் மகிழ்ச்சியாகும்.

இன்றைய வரலாற்றுக் காலகட்டத்தில் எமது இந்து மக்களுக்கும் கலை, பண்பாட்டு வாழ்வியலை மீண்டும் வலுவான உழைப்புடன் முன்னெடுத்துச் செல்லவும் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவும் மற்றும் சிலரும்கூட இந்தப் பெரும் முயற்சி வெற்றியடைய வெகுவாக ஒத்துழைத்தமையும் பாராட்டிற்குரியது.

இவர்கள் அனைவரையும் துணைவேந்தரையும் இவ்விடத்தில் நன்றியுடன் நினைத்து கொள்கின்றேன்.

தவமாய்த்தவமிருந்து பெற்ற இப்பீடத்தினை சிறப்பாக வழிநடத்திச்சென்று முன்னேற்றம்காண பீடம் சார்ந்த அனைவரும் ஒத்துழைத்து வழிசமைக்க வேண்டுமென வலம்புரி ஆசிரியர் கூறிய வாழ்த்தும் இதன் வளர்ச்சியை மீண்டும் ஊக்குவிக்கும் உந்துசக்தியாகும்.

இந்து நாகரிகத்துறையில் சைவசித்தாந்த மெய்யியல் "இந்துத் தத்துவம்" என்ற அலகிலே இதுவரை காலமும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் சைவசித்தம் என்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கற்கைகள் பீடத்தில்தான் முதல்முதலாக தனித்துறையாக அமையப் பெற்றுள்ளமை இதுவே முதற்தடவையாகும் என்பதனை நிச்சயமாக இவ்விடத்தில் பதிவிட்டாக வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையினரின் அனுசரணையுடன் சைவசித்தாந்த மெய்யியல் பட்டப்பின் படிப்புக்கள் பீடத்தால் முதுகலைமாணிப் பட்டப் படிப்பினையும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு சைவசித்தாந்த மெய்யியல் கற்கைநெறி இந்து சமுதாயத்தின் கல்விப்புலத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் அதற்கான தனித்துறை ஒன்று பலகாலம் முயன்றும் அமையவில்லை என்பது மிகவும் மனவருத்தமாக இருந்தது.

அத்தகைய கல்வியாளர், சான்றோர்களின் மனக்கிலேசத்தைப் போக்கி பெரும் ஆறுதலையும் தருவதாக சைவ சித்தாந்தம் தனித்துறையாக மலர்வது இலங்கையின் இந்து கழக, சமய சமுதாயத்தில் அரும்பெரும் வரலாற்று சாதனை என்றால் மிகையாகாது. சேர்.பொன்.இராமநாதலின் ஆத்மார்த்தமான எண்ணங்களும் நனவாகின்றன.

இந்து நாகரிகத்துறையிலே இந்து தத்துவ அலகிலேதான் அதனுடன் இணைந்து சைவசித்தாந்தமும் கற்பிக்கப்பட்டு வந்தது. அதனால் ஐம்பது வீதமே சைவசித்தாந்தக் கற்கை நெறியைக் கொடுக்க முடிந்தது. முழுமையான கற்பித்தல் வழங்க முடியவில்லை. ஆனால் தற்போது சைவசித்தாந்தம் தனித்துறையாக அமைவதால் அந்தக் கற்கை நெறியினை முழுமையாக கற்பிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது திருப்தியாகவுள்ளது.

சைவசித்தாந்த மெய்யியலின் முப்பொருள் கோட்பாடு பிரமாணவியலுடனும் இலக்கணவியலுடனும் முற்றுப் பெறுவதில்லை. அதனுடன் சாதனை இயல், பயனியல் என மேலும் இரு இயல்களை மெய்கண்டார் தனது சிவஞான போத நூலில் எழுதியே நிறைவு செய்துள்ளார். இதனையே வழி நூலும் சார்பு நூல்களும் உறுதிபடக் கூறியுள்ளன.

சைவசித்தாந்தக் கற்கை நெறியிலே முதன்மைப் பாடநெறியாக மெய்கண்ட சாத்திரங்களும் பன்னிரு திருமுறைகளும் வேதசிவாகமங்களும் அஷ்டப்பிரகரண சித்தாந்த சாத்திரங்களும் கூறுகின்ற மெய்யியல் கட்டமைப்பு தான் சிறப்பான முக்கியமான பங்கினை வகிக்கின்றன. எனவே அவற்றையே பாடநெறியினைத் தயாரிப்போர் கவனத்தில் கொண்டால் முழுமையான சைவசித்தாந்த மெய்ஞ்ஞானத்தை மாணவ சமூகத்திற்கு வழங்கமுடியும். சாதனையியலும் பயனியலும் கற்றுத் தேறும் போதுதான் முப்பொருள் கூறும் வாழ்வியல் சித்தாந்தம் சமுதாய நடைமுறையில் கடைப்பிடிப்பதாக அமையும். சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறி சித்தர்கள் சித்தாந்தமான சுத்த சமரச சன்மார்க்க ஞானத்தையே உலகிற்கு வழங்கியுள்ளதனை மெய்கண்ட சாத்திர நூல்களைக் கற்றோர் நிச்சயமாக விளங்கிக் கொள்வர்.

அத்தகைய கற்றல் செயற்பாடுகளே காலப்போக்கில் இந்து சமுதாயத்திற்கு மட்டுமல்ல உலக சமுதாயத்திற்கே சமய, சமூக இன நல்லிணக்கத்தையும் அன்பு நெறிகலந்த அற ஒழுக்கப் பரிமாணங்களையும் திடமாக வழங்கமுடியும் என்பது அடியேனுடைய நம்பிக்கை. எதையும் யாரையும் இங்கு வற்புறுத்தி அழுத்தம் கொடுப்பது எனது நோக்கமல்ல. உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனுடைய அருளாட்சியும் அதனால் "நின்றது வான்புகழ் உலகெலாம்" என தீர்க்கதரிசனத்துடனும் கூறிய சேக்கிழாரின் அமுதமொழிகளே இவற்றிற்கு தக்க சான்றாகும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் அமைந்துள்ள சைவசித்தாந்தத்துறை எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் அமைய இருப்பது நாமெல்லோரும் செய்த தவப்பயனாகும். இத்தகையதொரு இந்துக் கற்கைகள் பீடமும் சைவசித்தாந்தத்துறையும் அமைவதற்காக பலகாலமாக கடுமையாக உழைத்து முயற்சி செய்து பாடுபட்டு ஒப்பேற்றிய அனைவரும் பாராட்டி மகிழ்வதற்குரியவர்களாவர். பார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அவ்வாறே இன்றைய நல்ல நாளில் ஆரம்பமாகும் இந்துக்கற்கைகள் பீடத்திலே எதிர்காலத்தில் இந்துதத்துவத் துறை சமயங்களின் ஒப்பீட்டுத் துறை போன்றவையும் அமைந்து மக்கள் சமுதாயத்தை ஒழுக்க விழுமியம் சார்ந்த சமுதாயமறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென பரம்பொருளை வேண்டி அமைகிறேன்.

கலாநிதி.கலைவாணி இராமநாதன்,
ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மனநிறைவுடன் வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்

### இந்துக் குருமார் அமைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துபீடம் என்ற புதிய பீடம் ஆரம்பிப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்து நாகரிகத்துறை என்கின்ற ஒரு பாரம்பரியமான, தனித்துவமிக்க துறை ஒன்று யாழ்ப்பாண சமூதாயத்திற்குப் பொருத்தமுடைய சைவ சித்தாந்தத் துறையும் புதிதாக இணைக்கப்படுவது பெரும் வரப்பிரசாதமாகும்.

சமஸ்கிருதத் துறையுடன் மூன்று துறைகள் ஆரம்ப கட்டத்தில் இருந்தே தொடங்க இருக்கின்ற முயற்சி இறைவன் திருவருள் என்றே கூற வேண்டும். பார்வதி பரமேஸ்வரனின் திருவருளால் இத்தகைய முயற்சிகள் வளர்ச்சி பெற வேண்டும் என ஆசீர்வதிப்பதில் பெரும் மகிழ்வடைகின்றோம் என இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கு.வைத்தீஸ்வரக்குருக்கள், செயலாளர் பிரம்மஸ்ரீ சந்திரசேகர சர்மா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் யாழ்ப்பாண சமுதாயத்தில் சைவத்தினை யாழ்ப்பாணத் தமிழர்கள் பெருமூச்சாகக் கொண்டனர். இதனது அடியூற்றே உலகளாவிய ரீதியிலே என்றும் எமது பண்பாடாக பரந்து நிற்கின்றது.

இத்தகைய ஒரு உன்னத முயற்சிக்கு நாம் எங்களால் ஆன ஒத்துழைப்பை என்றும் வழங்குவோம் என்பதோடு சவால்கள் மிகுந்த எமது சமுதாயத்தின் பல்வேறுவிதமான முகங்களுக்கும் அறிவுசார் துறையில் உங்களது துறை என்றும் வளம் பெற்ற ஒரு வளமாக அமைய வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இந்தப் பீடம் என்றும் வளமும் வளர்ச்சியும் பெற வேண்டும் என ஆசீர்வதித்துப் பெரும் மகிழ்வடைகின்றோம் என அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ஜனாதிபதியைச் சந்தித்த புதிய வான்படைத் தளபதி



புதிய வான்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் நேற்று முன் தினம் நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

வான்படைத் தளபதியாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் முதன்முறையாக நேற்று முன் தினம் ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், இதன்போது சம்பிரதாய பூர்வமான நினைவுப் பரிசில்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. (இ-7)

### உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு A9 வீதி-பசுமை வீதி

# வவு.இயக்கச்சி வரையான வீதியின் இருமருங்கிலும் மரம் நடுகை திட்டம் ஆளுநர் தலைமையில் ஆரம்பம்



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கும் செயற் றிட்டங்களுக்கு வடமாகாணத் தின் பங்களிப்பினை வழங்கும் நோக்கிலும் கொழும்பு - கண்டி பிரதான வீதியான ஏ-9 வீதியின் வவுனியா தொடக்கம் இயக்கச்சி வரையான வீதியின் இருமருங் கிலும் மரக்கன்றுகளை நாட்டும் ஆரம்ப செயற்றிட்டம் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலை மையில் ஏ-9 வீதியின் மாங்குளம் 226 ஆவது மைல்கல் பிரதே சத்தில் நேற்று முற்பகல் இடம் பெற்றது.

ஏ-9 வீதியின் குறிப்பிட்ட பகு தியினை பசுமை வீதியாக மாற் றும் ஆளுநரின் எண்ணக்கரு வுக்கு அமைய இந்த மரநடுகைத் திட்டம் வடமாகாண உள்ளூரா ட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்ச னின் மேற்பார்வையில் பிரதேச சபைகளின் பராமரிப்பில் இடம் பெறுவதுடன் இந்தத் திட்டத்தின் மாவட்ட ரீதியான நிகழ்வுகள் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்ட செயலாளர்களின் தலை மையில் வவுனியா மற்றும் ஆனை யிறவு பிரதேசங்களில் இடம்பெற் றது. (9)

### புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்

# கட்டாக்காலி நாய்களால் பெரும் தொல்லை

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித் துள்ளதால் அதிகளவானோர் நாய் க்கடிக்கு இலக்காகி வருவதுடன் விபத்துக்களும் இடம்பெற்று வரு வதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு பிரதேசத்தில் தற்போது கட் டாக்காலி நாய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குறிப்பாக, பிர தான வீதி மற்றும் நகரின் வர்த்தக நிலையங்களை அண்மித்த பகு திகளில் இவ்வாறு கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகள விலேயே காணப்படுகின்றன.

இவ்வாறு நாய்களின் தொல் லைகளால் அதிகளவான விபத் துக்கள் இடம்பெற்று வருவது டன், பலர் நாய்க்கடிக்கும் இலக் காகி வருவதாகவும் வர்த்தகர் கள் மற்றும் பொதுமக்கள் தெரி வித்துள்ளனர்.

குறிப்பாக, புதுக்குடியிருப்பு பகு தியில் உள்ள பாடசாலைச் சூழல்க ளிலும் இவ்வாறான கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித் துக் காணப்படுவதாகவும் இதனால் மாணவர்கள் பெரும் அசௌகரிய ங்களை எதிர்கொள்கின்றார்கள் எனப் பெற்றோர், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (9-315)



## சிறுவர் பராமரிப்பு நிலையம் திறப்பு



(முல்லைத்தீவு)

உலக சுற்றாடல்தினத்தை முன் னிட்டு, விசுவமடு பிரதேச மணல் அகழ்வுப் பத்திர உரிமையாளர் கள் சங்கமானது, புவிச்சரிதவி யல் அளவைச் சுரங்கங்கள் பணி யகத்தின் வழிகாட்டலில் செயற் படுத்திய "சூழல் மேம்பாடும் மர நடுகை நிகழ்வும்" நேற்று புதன்கிழமை இளங்கோ புரம் சோழர் பராமரிப்பக வளாகத்தில் இடம்பெற்றது.

யோ.புரட்சியின் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விசுவமடு பிரதேச மணல் அகழ் வுப் பத்திர உரிமையாளர் சங்கத் தினரால் புனரமைப்புச் செய்யப் பட்ட "சோழர் பராமரிப்பு நிலை யத்தை நிகழ்வின் பிரதம விருந் தினரான புவிச்சரிதவியல் அள வைச் சுரங்காங்கள் பணியகத்தின், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பிராந் திய அகழ்வுப் பொறியியலாளர் டி.மயூரன் திறந்து வைத்தார். (9)

# புதுக்குடியிருப்பு பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுமா?

# பொதுமக்கள் கேள்வி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய உப நகரங்களில் ஒன் றான புதுக்குடியிருப்பு பிரதேச த்தில் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாமையினால் தேவைகருதி அப்பிரதேசத்துக்கு வரும் பொதுமக்கள், வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு நகரில் அதிகளவான மக் கள் வாழ்ந்து வருவதுடன், பல் வேறு தேவை கருதி அதிகள வான மக்கள் கூடுகின்ற ஓர் இடமாகவும் அப்பிரதேசம் காண ப்படுகிறது.

இந் நிலையில் புதுக்குடியிரு ப்பு பிரதேசத்திற்கான பேருந்து நிலையம் உரிய இடத்தில் இது வரை அமைக்கப்படாமல் உள் ளது.

அதாவது, புதுக்குடியிருப்பு பகு திக்கான பேருந்து நிலையத்தி ற்கு உரிய இடம் தெரிவு செய்யப்ப டாமல் பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் புதுக்குடியிருப்பு சந் தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள போதும், குறித்த பேருந்து நிலை யம் பயன்படுத்தப்படாத நிலை யில் காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு நகரில் இரு ந்து ஒட்டுசுட்டான்-வவுனியா செல் லும் பயணிகள் ஒட்டுசுட்டான் வீதி யிலும் முல்லைத்தீவு செல்லும் பய ணிகள் முல்லைத்தீவு வீதியிலும் அதேபோல் கிளிநொச்சி செல்லும் பயணிகள் பரந்தன் வீதியிலும் தரித்து நிற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன், குறுந்தூர போக்கு வரத்துச்சேவைகள் இன்மை மற்றும் மேலதிக அடிப்படை வச திகள் இன்மை எனப் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின் றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிக முக்கிய உபநகரமாக காணப் படும் புதுக்குடியிருப்பு பிரதேசத் தின் தேவைகளை நிறைவு செய்து தருமாறு மக்கள் பிரதிநிதிகளி டம் பொதுமக்கள், வர்த்தகர்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (9-315)

## சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மரம் நடுகை

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் மரம் நடுகை வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கில் பல்வேறு இடங்களில் மரம் நடுகை நிகழ்வு இடம்பெற்றது.



வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் வனவளத்திணைக்களம், விவசாய திணை க்களம் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையினர் இணைந்து வவு னியா விவசாய பண்ணைக்கு முன்பாக ஏ9 வீதியில் நேற்று 250 மரங்கள் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் இராணுவத்தின் 56 ஆவது படைப்பிரிவு அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், விவசாய திணைக் களத்தின் அதிகாரிகள், மாணவர்கள், கிராம சேவகர்கள், பொலிஸார்என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளாவோடை பிரதேசத்தில் மரநடுகை இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய, பிரதேச செயலா ளர்கள், திணைக்களங்கள்சார் அதிகாரி கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





மன்னார் முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட வில்பத்து பகுதிகளில் மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரி வின் ஏற்பாட்டில் வில்பத்து பகு தியில் மரங்கள் நாட்டப்பட்டன.

மன்னார்தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி மேஜர் ஜெனரல் பண்டார தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இராணுவத்தின் வன்னி மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, முசலி பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மாணவர்கள், இராணுவத்தினர் எனப் பலர் கலந்து கொண்டு மரங்களை நாட்டியிருந்தனர். (9-250-285-312)

# புனித ரம்ழான் விசேட தொழுகை



முஸ்லிம் மக்களின் புனித ரம்ழான் (நோன்பு) பெருநாள் விசேட தொழுகைகள் வடக்கில் நேற்று பல்வேறு இடங்களில் அமைதியான முறையில் இடம் பெற்றன.

அந்தவகையில் வவுனியா தௌஹீத் ஜமாத்தின் ஏற்பாட்டில் புனித நோன்பு பெருநாள் திடல் தொழுகை வவுனியா பட்டானிச் சூர் குடாவயல் திடலில் பள்ளி தலைவர் மௌலவி எம்.எப். சாபிக்கின் (பாரி) தலைமையில் தொழுகைகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தின் பின் வீதியில் அமைந்துள்ள பிரதான ஸலாம் ஜும்ஆ பள்ளிவாசலில் மௌலவி ஹஜுமல் தலைமையில் முஸ்லிம் மக்கள் விசேட தொழுகை இடம் பெற்றது.

மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் மௌலவி அஸ்செ ய்க் எஸ்.ஏ.அசீம் தலைமையில் புனித ரம்ழான் பெருநாள் தொழு கையும், விசேட பிரார்த்தனைக ளும் இடம் பெற்றன. இந்த விசேட தொழுகைகளில் நூற்றுக்கண க்கான முஸ்லிம்கள் கலந்து கொண்டிருந்ததுடன் பள்ளி வாசல்க ளுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங் கப்பட்டிருந்தது. (9-250-285-312)

# வாவிக்கரையில் சிரமதானமும் வட்டுவாகலில் மரம் நடுகையும்





"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" வேலைத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு பேருந்து தரிப்பிடத்துக்கு அருகாமையிலுள்ள வாவிக் கரையோரம் துப்புரவு செய்யும் பணிகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் கடல்நீரேரியின் ஓரமாக கடற்படையினர், கடற்கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தினுடைய மேலதிக செயலாளர் ரோஹண அபேரத்ன, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வட்டுவா கல் பாலத்திற்கு அருகாமையில் உள்ள நந்திக் கடல் ஓரமாக மரக்கன்றுகளை நாட்டியிருந்தனர். (9-281)

# போக்குவரத்து வசதியின்றி துன்பப்படும் பூநகரி முட்கொம்பன் கிராம மக்கள்



கிளிநொச்சி பூநகரி முட்கொம்பன் கிராமத்திற்கான போதிய போக்குவரத்து வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதாவது முட்கொம்பன் கிராமத்தில் உள்ள மக்கள் வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கும் பூநகரி அல்லது கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த கிராமத்திலிருந்து செல்வதற்கான உரிய போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை. இதனால் அந்த மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாவும் இவ்வாறு போக்குவரத்து வசதிகள் இன்மையால் பயணத் தேவைகளுக்கு நாள் ஒன்றை செலவிட வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். மக்கள் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# மாற்றுவலுவுடையோருக்கு உதவிகள் வழங்கல்





நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாற்றுவலுவுள்ளோருக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீர் சுத்திகரிப்பு தொகுதி வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரோஹண அபேரத்ன, ஜனாதிபதி செயலகத்தின் உதவிச் செயலாளர் லலித் பண்டார, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கி வைத்தனர.

இதில் மாற்றுவலுவுள்ளோர்களுக்கான சக்கர நாற்காலிகள், கட்டில்கள், செவிப்புலனற்றோருக்கு இயந்திரப் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீர் சுத்திகரிப்பதற்கான தொகுதியும் வழங்கி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கை நெறிகளுக்கான சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ரகுராம் கலந்துகொண்டு தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான விளக்கங்களை அளித்தார். (9-281)

# பாடசாலை சமூக மட்டத்திலும் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுகின்றனர்

## மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு



அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னர் இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இடைவெளிகள் குறித்தும் பாடசாலை சமூகத்திற்கிடையிலான இடைவெளிகள் குறித்தும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அவதானத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் தாம் கரிசனை கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வவுனியா மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே வன்னிப்பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி எம்.ஆர்.பிரியதர்சன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

எமது மனித உரிமை ஆணைக்குழுவானது கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள சிபாரிசுகளின் அடிப்படையில் பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் பாடசாலைகளில் ஒரு சமூகத்தை சேர்ந்த பிள்ளைகள் ஒடுக்குதலுக்குட்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. அவ்வாறான சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுள்ளதையும் அறியக்கூடியதாக உள்ளது.

அது மட்டுமல்லாது ஆசிரியர்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் மத்தியிலும் இவ்வாறான பிரச்சினைகள் உருவாக்கப்பட்டுள்ளமை எமது அவதானத்திற்கு எட்டியுள்ளது.

இதன் அடிப்படையில் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா காரியாலயமானது பாடசாலை மாணவர்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றது. இதற்காக பல வேலைத்திட்டங்களை நாம் அண்மையில் ஆரம்பித்துள்ளோம்.

குறிப்பாக பாடசாலை சமூகத்திற்குள்ளே பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒருவரை ஒருவர் சந்தேகக்கண்ணோடு பார்க்கின்ற நிலைமையை போக்கும் வகையிலும் அவர்கள் மத்தியில் ஒரு சமாதானமான நல்லிணக்கமான சூழலை உருவாக்கும் நோக்கோடும் நாம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

முதற்கட்டமாக நாம் வவுனியா மாவட்டத்தில் இயங்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலை அதிபர்களை அழைத்து அவர்களிடமிருந்து பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியிருக்கின்றோம். அவர்களால் முன்வைக்கப்பட்ட பல பிரச்சினைகள் எமது அவதானத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மாணவர்கள் மத்தியில் காணப்படும் இடைவெளிகள், முஸ்லிம் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், அவர்களது ஆடை தொடர்பிலுள்ள பிரச்சினைகளை இக் கலந்துரையாடலில் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

அந்தவகையில் பாடசாலை மத்தியில் இன நல்லுறவையும் சமாதான நிலைமையையும் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை கொண்டு செல்ல இருக்கின்றோம்.

இதன் அடிப்படையில் மனித உரிமை ஆணைக்குழுவானது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நுணுக்கமாக ஆராய்ந்து கல்வி அமைச்சுக்கு சில சிபாரிசுகளை அனுப்பியுள்ளோம்.

சிவில் சமூகத்திடம் இருந்து பல கேள்விகள் எழுகின்றன. அதாவது அவசரகாலச் சட்டம் மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்பில் விரைவில் கலந்துரையாடலை நடத்தி அது தொடர்பில் பூரண விளக்கத்தினை பெற்றுத்தருமாறும் ஆகவே மிக விரைவாக அவசரகாலச் சட்டம் தொடர்பான தெளிவூட்டலை சிவில் சமூகத்திற்கும் ஏனைய சமூகத்திற்கும் நாம் வழங்குவோம் என மேலும் தெரிவித்தார். (9-250)




# கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைது



(பரந்தன்)

சுண்டிக்குளம் பகுதியில் கேரளக் கஞ்சாவை கடத்த முற்பட்ட மூன்று சந்தேக நபர்கள் நேற்றுக் காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் கொண்டு சென்ற ஒரு தொகுதி கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது. கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட சட்டவிரோத செயற்பாடுகள் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் மற்றும் கல்லாறு இளைஞர்களின் உதவியுடன் குறித்த பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் செய்த போது சுண்டிக்குளம் சாளை பகுதியில் வைத்து வாகனம் ஒன்றில் கடத்த முற்பட்ட சுமார் 115 கிலோகிராம் கஞ்சாவினை மீட்டதுடன் வாகன சாரதி உட்பட மூன்று சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடல்வழியாகக் கொண்டு வரப்பட்ட கஞ்சா பின்னர் சுண்டிக்குளம் கடற்கரையில் இறக்கப்பட்டு சாளை ஊடாக வாகனத்தில் கடத்தப்பட்ட போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கையின் போது குற்றத் தடயவியல் பொலிஸாரின் மோப்ப நாயும் பயன்படுத்தப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் மற்றும் கிளிநொச்சிப் பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (9-312)

# போதைப் பொருள் மீட்பு

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் சுமார் 150 கிலோகிராம் அளவிலான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.


பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே குறித்த தொகுதி போதைப்பொருள் நேற்றுப் புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9)

## பாரதம்

# மதவெறி பிடித்தவர்களுக்கு தமிழகத்தில் இடமில்லை

### மு.க.ஸ்ராலின் எச்சரிக்கை



(சென்னை)

தமிழகத்தில் மதவெறி பிடித்தவர்களுக்கு இடமில்லை என்பதை நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக மக்கள் நிரூபித்து உள்ளனரென தி.மு.க.தலைவர் மு.க.ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

கொளத்தூரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ரம்ழான் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே மு.க.ஸ்ராலின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தவகையில் ஒவ்வொரு ஆண்டும் ரம்ழான் நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் இந்த ஆண்டு ரம்ழான் வாழ்த்து மட்டுமல்ல, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியை தேடித்தந்த உங்களுக்கு நன்றி சொல்லவும் வந்திருக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழகத்தை பொறுத்தவரையில் மதவெறி பிடித்தவர்களுக்கு, மதத்தை வைத்து அரசியல் நடத்த வேண்டும் என்ற உணர்வோடு அரசியல் நடத்திக் கொண்டு இருப்பவர்களுக்கு, மதத்தை பிரித்து அதனூடாக அரசியல் இலாபம் தேடலாம் என்று கருதுபவர்களுக்கு தமிழகத்தில் நிச்சயமாக இடம் இல்லை என்பதை தமிழக மக்கள் குறித்த தேர்தலின் ஊடாக நிரூபித்துக் காட்டி இருக்கிறார்கள் என மு.க.ஸ்ராலின் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (7)

# ஜெயலலிதா நினைவிடத்தில் ஓ.பி.எஸ்,மகன் அஞ்சலி



(சென்னை)

சென்னையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் துணை முதல் அமைச்சர் ஓ.பி.எஸ். மற்றும் அவரது மகன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் மற்றும் தமிழக சட்டசபைக்கான இடைத்தேர்தல் ஏப்ரல் 18 ஆம் திகதி நடைபெற்றது. இதற்கான வாக்கு எண்ணிக்கை கடந்த மே 23 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் தேனி நாடாளுமன்ற தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு ரவீந்திரநாத் வெற்றி பெற்றார்.

இதனையடுத்து சென்னை மெரினாவில் உள்ள மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா நினைவிடத்திற்கு சென்று தமிழக துணை முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது மகன் ரவீந்திர நாத் எம்.பி.ஆகியோர் நேற்று மரியாதை செலுத்தினர். (7)

# எழுவரின் விடுதலை குறித்து மாநில அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

### அற்புதம்மாள் கோரிக்கை





(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள எழுவரின் விடுதலை தொடர்பில் ஆளுநருக்கு பரிந்துரைக்கப்பட்டு 9 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அவர்களின் விடுதலை குறித்து மாநில அரசு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நேற்று முன்தினம் தொலைக்காட்சி ஒன்றுக்கு விசேட செவ்வியொன்றை வழங்கியுள்ளார்.

குறித்த செவ்வியில், "பிற மாநிலங்களில் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை, சிறை விதிகளின்படி விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு காணப்படுமாக இருந்தால் தமிழகத்தில் ஏன் அவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்ற முடியாது.

அத்துடன் பேரறிவாளனின் விடுதலை குறித்து நான் மத்திய அரசை நாடவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். ஆனால் மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நான் மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது சட்டத்தை எதிர்க்கும் செயல் என்றே கருதுகின்றேன்" என அவர் தெரிவித்துள்ளார்.

நடிகர் சஞ்சய்தத்தை விடுதலை செய்தது மாநில அரசுதான் என உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அந்த நடைமுறையை தமிழகத்திலும் பின்பற்றி எழுவரின் விடுதலைக்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (7)

# சூடானில் து...

# உயிரிழப்பு 60...

(கார்டூம்)

**சூடான் நாட்டில் போராட்டக்காரர்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது.**

சூடான் நாட்டில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்த நிலையில் இராணுவப் புரட்சி காரணமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற இராணுவத் தளபதியும் மக்களின் எதிர்ப்பு காரணமாக பதவியை இராஜினாமா செய்தார். அதன் பின்னர் சிவில் ஆட்சியை ஏற்படுத்த

# சூடானில் முடிவுக்கு வ...

# 9 மாதங்களில் தேர்...

### இராணுவம் ...





(கார்டூம்)

சூடான் நாட்டில் சிவில் ஆட்சியை ஏற்படுத்த வலியுறுத்தி மக்கள் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில், 9 மாதங்களில் தேர்தல் நடத்தி புதிய அரசு அமைக்கப்படும் என இராணுவம் அறிவித்துள்ளது.

# நைஜீரியாவில் கூட்...

# 20 பயங்கரவாதி...

(நைரோபி)

நைஜீரியாவில் பன்னாட்டு கூட்டுப்படை நடத்திய அதிரடி தாக்குதல்களில் 20 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹராம் மற்றும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை அழிக்கும் நடவடிக்கையில் பன்னாட்டு கூட்டுப்படை தீவிரமாக களமிறங்கியுள்ளது.

அவ்வகையில் ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பு ஆதிக்கம்






# துப்பாக்கிச்சூடு! 60 ஆக அதிகரிப்பு!



வலியுறுத்தி பொதுமக்கள் தீவிர போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கார்டுமில் உள்ள இராணுவ தலைமையகத்திற்கு வெளியிலும் போராட்டம் வெடித்தது. இந்த தர்ணா போராட்டம் சுமார் ஒரு வார காலம் நீடித்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இராணுவம் போராட்டக்காரர்களை ஒடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டது. போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாததால் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில், குழந்தைகள் உட்பட 13 இறக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் என முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், போராட்டக்காரர்களை அடக்க இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

# ஒடிசாவில் போனி புயல் தாக்கம்; ஒன்றரை லட்சம் வீடுகள் இருளில்

(புவனேஸ்வரம்)

ஒடிசா மாநிலத்தில் போனி புயல் தாக்கி ஒரு மாதம் ஆகியும் 1 1/2 இலட்சம் வீடுகள் இருளில் தவிக்கின்றன.



சென்னைக்கு அருகே வங்கக்கடலில் உருவான போனி புயல், பாதை மாறிச் சென்று ஒடிசாவில் கடந்த மாதம் 3 ஆம் திகதி தாக்கியது. அதிகபட்சமாக மணிக்கு 175-200 கி.மீ. வேகத்தில் வீசிய பேய்க் காற்றால் ஆயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. பல்லாயிரக்கணக்கான மின் கம்பங்கள் விழுந்தன. இதனால் மின் விநியோகம் பாதித்தது. இலட்சக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கின. 14 மாவட்டங்களில் ஒரு கோடியே 65 இலட்சம் பேர் மிகுந்த பாதிப்புக்குளாகினர்.

அங்கு பூரி மாவட்டம் தான் மிகுந்த பாதிப்புக்குளானது. 64 பேர் பலியானதில், 39 பேர் பூரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மாநிலம் முழுவதும் 25 இலட்சத்து 1,131 வீடுகளில் மின்விநியோகம் பாதித்து இருளில் மூழ்கின. இதில் 23 இலட்சத்து 36 ஆயிரத்து 584 வீடுகளில் மின்விநியோகம் சீரானது.

பூரி மாவட்டத்தில் 2 இலட்சத்து 91 ஆயிரத்து 171 வீடுகளில் மின் சாரம் துண்டிக்கப்பட்டது. இதில் 52 சதவீதம் வீடுகளில் மின் விநியோகம் சீராகி விட்டது.

இன்னும் சுமார் ஒரு இலட்சத்து 64 ஆயிரம் வீடுகள் இருளில் தவிப்பது தொடர்கதையாகி உள்ளது. இந்த வீடுகளில் வசிக்கிற மக்களின் அன்றாட வாழ்க்கை, மின்விநியோகம் இன்றி பரிதாபமாக உள்ளது.

இதையொட்டி, பூரி மாவட்டத்தைச் சேர்ந்த கல்வித்துறை அமைச்சர் சமீர் ரஞ்சன் தாஸ் கூறும்போது: "பூரி மாவட்டத்தில் இன்னும் இருளில் தவிக்கிற வீடுகளுக்கு மீண்டும் மின் விநியோகம் செய்வதற்கு தேவையான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார். (7)

# ...ரும் இராணுவ ஆட்சி ...ர்தல் நடத்தப்படும்

## ... அறிவிப்பு



சூடான் நாட்டில் ஜனாதிபதிக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்த நிலையில், பல கட்டப் பேச்சுவார்த்தைக்கு பிறகு 3 ஆண்டுகளுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பாக எதிர்க்கட்சி கூட்ட ணியுடன் இராணுவம் ஒப்பந்தம் செய்தது.

இராணுவ ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர அதிகாரிகள் முடிவு செய்தனர். போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தையை நிறுத்த முடிவு செய்துள்ளனர்.


எதிர்க்கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக்கொள்வதாகவும் இன்னும் 9 மாதங்களில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் எனவும் லெப்டினன்ட் ஜெனரல் அப்தெல் பத்தா அல் பர்கான் அறிவித்துள்ளார். (7)

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு 887 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நோன்புப் பெருநாளை முன்னிட்டு 887 கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கானி, நாட்டு மக்களுக்கு நேற்று



முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆற்றிய உரையில் அறிவித்துள்ளார்.

அத்தோடு, இருதரப்பு உறவை மேம்படுத்தும் விதமாக இந்த மாத இறுதியில் பாகிஸ்தானுக்குத் தாம் பயணம் மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (7)

# இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்தவர்களின் உடல்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைப்பு

(அரியானா)

இரண்டாம் உலகப்போரில் உயிரிழந்த இரு இந்திய இராணுவ வீரர்களின் உடல்கள் சுமார் 75 ஆண்டுகளுக்கு பிறகு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அரியானா மாநிலம் ஹிசார் மாவட்டத்தை சேர்ந்த பாலுராம் மற்றும் ஜாஜார் மாவட்டத்தை சேர்ந்த ஹரிசிங் ஆகியோரின் உடல்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் 1944 ஆம் ஆண்டு இரண்டாம் உல கப்போரின்போது இத்தாலியில் ஜேர்மனிய படைகளுக்கு எதிராக போரிட்டு உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த இருவரின் உடல் பாகங்கள் கடந்த 1960 ஆம்




ஆண்டு கண்டறியப்பட்ட நிலையில், அவர்கள் எந்தப் படைப் பிரிவை சேர்ந்தவர்கள் என்பது பற்றிய தேடல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த தேடல் நடவடிக்கையில், குறித்த இருவரும் இந்தியர்கள் என அடையாளம் காணப்பட்டதுடன், இந்திய இராணுவத்தினரின் உதவியுடன் இருவருடைய குடும்ப உறுப்பினர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இருவரின் உடல்களும் நேற்று முன்தினம் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், கிராம மக்கள் முன்னிலையில், குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (7)

# ...ட்டுப்படை தாக்குதல் ...திகள் உயிரிழப்பு



உள்ள லேக் சாட் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று பன்னாட்டு கூட்டுப்படை அதிரடி தாக்குதல்களை நடத்தியது. அரேஜ், மால்கோனரி மற்றும் தும்பம் ரெகோ ஜெனரல் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களில் 20 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக நைஜீரிய இராணுவம் தெரிவித்துள்ளது. பன்னாட்டு கூட்டுப் படை தரப்பில் 4 பேர் காயமடைந்தனர். (7)

# பாராளுமன்றத் தெரிவுக்குழு பாதுகாப்புக்கு எந்தவிதத்திலும் அச்சுறுத்தலாக அமையாது!


## மைத்திரி தரப்புக்கு பொன்சேகா பதிலடி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணை நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எந்தவிதத்திலும் அச்சுறுத்தலாக அமையாது என பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டுத் தாக்குதல்கள் குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இரண்டாம் விசாரணை நேற்று முன்தினம் பாரளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி.சில்வா சாட்சியமளித்தார்.



இவருடைய சாட்சியங்கள் ஆரம்பிக்க முன்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணையால் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரி உட்பட அவரது தரப்பினர் தொடர்ந்து குற்றம் சாட்டி வரும் நிலையில் அதற்குப் பதில் வழங்கும் வகையில் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# விசாரணை நடத்தி விரைவாக அறிக்கையை வெளிப்படுத்துங்கள்

## பாராளுமன்றில் ஹரீஸ் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஐக்கியம் ஒற்றுமையை தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ளவே முஸ்லிம் அமைச்சர்களாகவிருந்த நாங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய தீர்மானித்தோம். அத்துடன் முஸ்லிம் தலைவர்கள் மீது தெரிவிக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பூரண விசாரணை நடத்தி அதன் அறிக்கையை விரைவாக அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எச்.எச்.எம்.ஹரீஸ் பாராளுமன்றில் தெரிவித்தார்.

மேலும் முஸ்லிம் தலைவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை தெரிவிக்க எதிர்வரும்



12 ஆம் திகதி குழு அமைக்கப் போவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனால் எமக்கு எதிராக குற்றச்சாட்டு தெரிவித்தவர்கள் அந்த குழுவில் முறைப்பாடுகளை தெரிவிக்க வேண்டும். எமக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விரைவாக விசாரணை செய்து, அதில் நாங்கள் குற்றம் செய்திருந்தால் எந்த தண்டனையை வேண்டுமானாலும் தாருங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் ஒரு மாதத்தில் பதவியேற்பார்கள்

## நளின் நம்பிக்கை

(கொழும்பு)

அமைச்சுப்பதவிகளை இராஜினாமா செய்த முஸ்லிம் அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என்றால் அவர்கள் ஒரு மாத காலத்தின் பின்னர், மீண்டும் அமைச்சர்களாக பதவியேற்பார்கள் என பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அமைச்சரவை இது சம்பந்தமாக கலந்துரையாடியது. முறைப்பாடுகள் இருந்தால், அதனை முன் வைக்க மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

றிசாத் பதியுதீன், அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோர் சம்பந்தமாக முறைப்பாடுகளை முன்வைக்க மூன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு, பொலிஸ் தலைமையகத்தில்



நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்காதவர்களை மீண்டும் அமைச்சரவை அமைச்சர்களாக பதவியேற்பார்கள்" எனத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெண்களின் முதுமை

ஒரு நகரப் பேருந்து போய்க் கொண்டிருந்தது. கூட்டம் கொஞ்சம் அதிகம் தான். ஒரு பெண் கொஞ்சம் சிரமத்தோட மேலே கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்! "நடத்துநர் பார்த்தார் அந்த அம்மாவுக்கு யாராவது ஒரு இடத்தைக் கொடுங்கள் அமர்ந்து கொள்ளட்டும்!" என்றார்.ஒருத்தர் எழுந்து கொண்டு இடம் கொடுத்தார். அந்த அம்மா அமர்ந்தார். எல்லாம் சரி! இப்போது அவருடைய முகம் எப்படி இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? கொஞ்சம் நன்றி உணர்வோடு அந்த நடத்துநரை பார்த்திருக்கும். எழுந்து இடம் குடுத்தவரைப் பார்த்திருக்கும்! அப்படித் தானே நினைக்கிறீர்கள்?

ஆனால் அப்படி இல்லை! மிகவும் கோபமாக அந்த நடத்துநரை முறைத்து பார்த்துக்கொண்டு அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தார். கடைசி வரைக்கும் முகத்தில் தெரிந்த கடுகடுப்பு மாறவே இல்லை! எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது. என்ன விடயம் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று எனக்குள்ளே ஆர்வமாக இருந்தது.

ஒரு இடத்திலே பேருந்து நின்றது. அவர்கள் இறங்கினார்கள். நானும் இறங்கினேன். கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அருகில் சென்றேன். "என்னங்க? அந்த நடத்துநர் மிகவும் இரக்கப்பட்டு உங்களுக்கு ஒரு இடம் கொடுக்கச் சொன்னாரே... அவர் மிகவும் நல்லவர் இல்லையா?" என்றேன். "நல்லவர் தான். யார் இல்லை என்று சொன்னார்கள்?" என்றார்.

"அப்படியானால் அவர் அப்படிச் சொன்னதும் நீங்கள் மிகவும் கோபமாக இருந்தீர்களே" என்றேன். "பிறகு என்னங்க...? என்னைப் பார்த்து அம்மா என்று சொல் கிறாரே? என்னைப் பார்த்தால் அவ்வளவு வயசானது போலவா தெரிகிறது? அந்த 'அம்மா'வுக்கு யாராவது இடம் கொடுங்கள் என்று தானே சொன்னார்! அதுதான் எனக்கு கோபம்! இப்போது நீங்களே சொல்லுங்கள். எனக்கு என்ன வயதிருக்கும்? " என்றார்.

நான் என்ன அந்தளவிற்கு விபரம் இல்லாத ஆளா? மனதில் என்ன தோன்றியதோ அதில் ஒரு 20 வயதைக் குறைத்துவிட்டு சொன்னேன். "என்ன ஒரு 20 அல்லது 21 இருக்கும்" என்றேன்.

"நீங்கள் தான் சேர் ஜீனியஸ்" என்று சொல்லிவிட்டு அவர் மிகவும் சந்தோசமாகப் போனார். இது எதற்காக சொல்ல வந்தேன் என்றால்? முதுமையை நாம் யாரும் ஆசைப்பட்டுக் கூப்பிடுவதில்லை. ஆனால் அது நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.அதுகூட பாருங்கள் கொஞ்சம் விபரம் தெரியாத பெண்கள் என்றால் கொஞ்சம் விரைவாகவே வந்து விடுகிறது. ஆண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிற போது பெண்களுக்கு முதுமை விரைவாகவே வந்து விடுகிறது. இது ஒரு பொதுவான அபிப்பிராயம். விஞ்ஞான ரீதியாக இது உண்மையா? இதைத் தெரிந்து கொள்வதற்காக அமெரிக்காவில் 'யேல்' பல்கலைக்கழகத்தில் ஒரு ஆராய்ச்சி நடத்திருக்கு. அதில் சில முக்கியமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மனித உடலிலே செல்கள் தொடர்ச்சியாக இறந்து கொண்டே இருக்கும்! இதை 'செல்களில் இனப்பெருக்கம்' என்று சொல்வார்கள். ஒரு குறிப்பிட்ட வயசு வரும் போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் புதிய செல்கள் உண்டாகிறது குறைந்துவிடும். அந்த சமயத்தில் தான் உடலிலே தசைகள் சுருங்க ஆரம்பிக்கிறது. அதனாலே தான் வயசான தோற்றம் உண்டாகிறது.

இப்போது நடந்த ஆராய்ச்சிகளில் இருந்து என்ன தெரிகிறது என்றால் "இந்த செல்களின் இயக்கம் ஆண்களை விட பெண்களுக்கு விரைவாகவே குறைய ஆரம்பிக்கிறது" என்று தெரிய வந்திருக்கிறது! குறிப்பாக எந்த வயதில் இந்த இயக்கம் குறைய ஆரம்பிக்கிறது? அதை துல்லியமாகச் சொல்ல முடியவில்லை! இருந்தாலும் ஆண்களுக்கு 35 வயதில் இது ஆரம்பிக்குமென்றால் பெண்களுக்கு 30 வயதில் இந்த இயக்கம் குறையலாம் என்று கண்டுபிடித்துள்ளார்கள்!அதனாலே தான் சில சமயம் கிட்டத்தட்ட ஒரே வயதில் கல்யாணமான தம்பதிகளைக் கொஞ்ச நாட்கள் கழித்துப் பார்த்தால் கணவனை விட மனைவிக்கு வயசு அதிகமாகத் தோன்றும்!

பல பேர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்... குழந்தை பெற்றுக்கொள்வதால் தான் பெண்களுக்கு முதிர்ச்சி அதிகமாகிறது என்று! அது சரியானதில்லை. குழந்தைப் பேறுக்கும் முதுமைக்கும் சம்பந்தமில்லை என்று சொல்கிறது இந்த ஆராய்ச்சி. அது இருக்கட்டும் பெண்கள் உடலிலே விரைவாக குறைகிற இந்த செல்களின் தன்மையை மேம்படுத்த ஏதாவது வழியுள்ளதா? புது ஓமோன் எதையாவது கண்டுபிடித்தால்தான் அது முடியும். ஜெனிடிக் கோடிங் என்ற புதிய துறையிலே இது சம்பந்தமான ஆராய்சியெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் பெண்கள் அதிகமாக கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு மட்டுமா அந்தக் கவலை. அதனாலே ஆண்களும் தான் மிகவும் கவலைப்பட வேண்டியிருக்கு. எப்படி என்கிறீர்களா? ஒரு பத்திரிகை நிருபர் ஒரு சினிமா நடிகையை பேட்டி காணப் போனார். அந்த அம்மா ஒரு 30 வருட காலமாக சினிமாவில நடிக்கிறவர். கேட்கக் கூடாத ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார். அதாவது உங்க வயது என்ன வென்றார். அந்த அம்மாவும் கொஞ்சம்கூட அலட்டிக்காமல் இந்த ஜூன் வந்தால் 20 முடிந்து 21 ஆரம்பம் என்றார். இந்த நிருபர் திடீரென்று புத்தி கலைங்கின மாதிரி தன் கையாலேயே தன் தலையில் ஓங்கி ஓங்கி குட்டிக் கொண்டார். அந்த அம்மா என்னங்க நான் ஏதாவது தப்பா சொல்லி விட்டேனா? என் பதில் சரியில்லை என்று நினைக்கிறீர்களா? அதற்கு உங்கள் பதில் சரிதான். என் கேள்வி தான் சரியில்லை. இந்தக் கேள்வியை 20 வருடத்திற்கு முன்னர் உங்களிடம் கேட்டிருக்க வேண்டும். நான் தான் மிகவும் லேட். அதுதான் குட்டிக் கொண்டேன் என்று மறுபடியும் குட்டிக் கொண்டார்.

# இனவாதத்தை இஸ்லாம் வெறுக்கிறது

# தேசியப் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசின் கடமை

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

**இனவாதம், பயங்கரவாதம் என்பவற்றை இஸ்லாம் சமயமும் வெறுக்கிறது. அந்த அடிப்படையில் தற்போது எழுந்துள்ள தேசியப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது தற்போதைய ஆட்சியாளர்களின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தினார்.**

நோன்புப் பெருநாளை முன்னிட்டு அவர் நேற்றுப் புதன்கிழமை வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

"முஸ்லிம் மக்கள் நாட்டின் ஏனைய இனத்தவர்களுடன் மிகவும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் செயற்பட்டவர்கள் என்பதை நாம் நன்கறிவோம். அதற்குக் காரணம் அவர்கள் அன்று தேசியத்துவத்திற்கு மதிப்பளித்து செயற்பட்டமையாகும்.

முஸ்லிம்களுக்கு வருடத்தில் மிகவும் மகிழ்ச்சிகரமான தினமாக இப்புனித நோன்புப் பெருநாள் தினம் விளங்குகின்றது.

உண்மையான முஸ்லிம் ஒருவர் பொறுமை, மற்றவர்களுக்கு உதவி செய்தல், மற்றவர்களின் பசியை உணர்வுபூர்வமாக நோக்குதல், பிறருக்கு நோவினை, நிந்தனை, இம்சைகள் என்பன செய்யாதிருத்தல், பிற மதங்களையும் இனத்தவர்களையும் மதித்தல் மற்றும் தமது தாய் நாட்டிற்கு அன்பு காட்டுதல் ஆகிய நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதற்கு பயிற்றுவிக்கப்படுகின்றார்.



பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களுடன் இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாம் சமயங்களைப் பின்பற்றும் மக்கள் வாழ்கின்ற எமது நாட்டிலே சமாதானம், ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றிற்கும் மேற்கூறிய சமய வழிகாட்டல்களின் மூலம் மகத்தான பக்கபலமொன்று கிடைக்கப் பெறுகின்றது" என தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

### 41 இலங்கையர்களுடன் மூழ்கிய படகு மீட்பு

(சிட்னி)

41 இலங்கையர்களுடன் மூழ்கிக்கொண்டிருந்த படகு ஒன்றை அவுஸ்திரேலிய - இலங்கைக் கடற்படையினர் இணைந்து மீட்டெடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்புப் படைத்தளபதிகளில் ஒருவரான **Major General Craig Furini** இந்தத் தகவலை வெளியிட்டார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "தமது படையினருடன் இணைந்து குறித்த மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினருக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக **The Australian** ஊடகம் வெளியிட்ட செய்தியில்.

"குறித்த சம்பவம் மே மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றது. படகினுள் தண்ணீர் புகுந்துகொண்டதால் அது மூழ்கத் தொடங்கியது. எனினும் அதிர்ஷ்டவசமாக படையினரால் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

படகில் இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. கடந்த சில மாதங்களாகவே அவுஸ்திரேலியா நோக்கிய படகுப்பயணங்கள் தீவிரமடைந்துள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்தது.

மார்ச் 7 ஆம் திகதி இதேபோன்றதொரு பயணத்தின்போது 40 பயணிகளுடன் ஒரு படகு இடைமறிக்கப்பட்டிருப்பதாகவும் இந்தத் தொடர்ச்சியான சம்பவங்களை யடுத்து எல்லைப்பாதுகாப்பை அவுஸ்திரேலிய கரையோர காவல்படையினர் அதிகரித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ-7)

### தற்கொலைத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 20 கோடி இழப்பீடு

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பலியானவர்களின் குடும்பங்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்காக சுமார் 20 கோடி ரூபாய் நிதி நட்டஈடாக வழங்கப்பட்டிருப்பதாக இழப்பீட்டுக்கான அலுவலகம் தெரிவித்தது.

இக்கோரச் சம்பவத்தில் பலியான 174 பேரின் குடும்பங்களுக்காகவும் காயமடைந்த 248 பேருக்கும் நட்டஈடு வழங்கப்பட்டது. மேலும், பாதிக்கப்பட்ட தேவாலயங்களை புனரமைப்பதற்காக சுமார் 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருப்பதாகவும் இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் பணிப்பாளர் ஆனந்த விஜேபால தெரிவித்தார். (இ-7)

### போலியான அரசியல் நாடகங்களையே அரசு அறிமுகப்படுத்துகிறது - பிரியதர்ஷன

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் பதவி விலகியமை ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நாடகம் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா, குற்றம் சாட்டப்பட்ட மூவரைத் தவிர பிறிதொருவரை எவரும் பதவி விலக அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிப்பதே எமது நோக்கம். தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். கடந்த காலங்களில் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளாதவர் இன்று தமது தரப்பினருடன் கூட்டாகப் பதவி விலகியமையால் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது.

இலங்கையின் தேசிய கொள்கைக்கும், கலாசாரத்திற்கும் அப்பாற் செல்லும்போது பிரச்சினைகளே தோற்றம் பெறும். பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதை விடுத்து அரசாங்கம் போலியான அரசியல் நாடகங்களையே அறிமுகப்படுத்துகின்றது எனவும் அநுர குற்றம்சாட்டினார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்



கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



யாழ்.இந்தியத் துணைத் தூதரகமானது கடந்த 3 ஆம் திகதி "உலக ஈருருளி நாளை" முன்னிட்டு, மகாத்மா காந்தியின் தன்னிறைவுக் கொள்கையை நினைவூட்டும் வகையில் "காந்தி ஈருருளி பேரணி" ஒன்றினை சிறப்பாக நடத்தியது. காலை 9.30 மணியளவில் அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலுள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் மலர்மாலை அணிவித்து அதனைத் தொடர்ந்து இப் பேரணியானது வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் ஆரம்பிக்கப்பட்டு யாழ்.மாநகரசபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் காந்தியக் கொள்கையைப் பின்பற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் அணிவகுக்க யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாகவுள்ள காந்தி திருவுருவச் சிலையை வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து இந்தியத் துணைத் தூதுவரால் காந்தியின் திருவுருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து இலங்கை காந்திசேவா சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சிவகரன், சர்வோதயம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஸ்ரீயுகேந்திரா மற்றும் ஏனைய சிறப்பு விருந்தினர்களாலும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அனைத்து காந்திய தொண்டர்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# பேராயர் இனவாதியென்றால் இரத்த ஆறு ஓடியிருக்கும்!



## மங்கள மீது விமல் பாய்ச்சல்

(கொழும்பு)

**பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இனவாதியாக இருந்திருந்தால் இந்நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்திருக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. சுட்டிக்காட்டினார்.**

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கூடியது.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச,

"குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காகவும் இனங்களுக்கிடையில் மோதல் ஏற்படாமல் இருப்பதற்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டவர்தான் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

அவர் இனவாதியாக இருந்திருந்தால் குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் இந்த நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியிருக்க வேண்டும். ஆனால், பொறுமையாகவும் நிதானமாகவும் செயற்பட்டு மக்களை நல்வழிப்படுத்தினார்.

இப்படிப்பட்ட ஒரு தலைவரை நிதி அமைச்சர் மங்கள சமரவீர, தனது டுவிட்டர் பக்கத்தில் கடுமையாக விமர்சித்தார்.


உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அத்துரலிய ரத்ன தேரரை, சந்திப்பதற்கு பேராயர் சென்றமையானது இனவாதத்தைத் தூண்டும் செயலென அவர் குறிப்பிட்டுள்ளார். இது அடிப்படையற்ற குற்றச்சாட்டாகும் என்பதுடன், பேராயருக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்" என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்துடன், நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் அறிவிப்பு, அரசாங்கத்தின் நிலைப்பாடா? என்றும் வினவினார். இதற்குப் பதிலளித்த சபை முதல்வரான லக்ஷ்மன் கிரியெல்ல,

"இக்கேள்விக்கு அமைச்சர் மங்கள சமரவீர பதிலளிப்பார். எனினும், மகாநாயக்க தேரர்கள் உட்பட மதத் தலைவர்களுக்கு மதிப்பளிக்க அரசியல்வாதிகள் தெரிந்துகொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

## இனவாதத்தை அதிகரிக்கும் பேராயர் கர்தினால் மல்கம்

### மங்கள சர்ச்சை டுவிட்


Mangala Samaraweera
@MangalaLK


#Cardinal Malcolm Ranjith fanning the flames of hatred and communalism by visiting fasting robed MP Rathana. #Vatican TAKE NOTE!
@Pontifex @VaticanNews #lka

♡ 742 12:41 PM - Jun 3, 2019 · Sri Lanka

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர் தளத்தில் சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் பதிவொன்றை இட்டுள்ளார்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரைச் சந்தித்து நலன் விசாரிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சென்றிருந்தார்.



பேராயரின் இந்த செயலானது இனங்களுக்கிடையே கொழுந்துவிட்டெரியும் இனவாதத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் என மங்கள தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## மங்களவின் டுவிட்டர் பதிவிற்கு பேராயர் இல்லம் கடும் கண்டனம்

(கொழும்பு)

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த அத்துரலிய ரத்ன தேரரைச் சந்திக்கச் சென்றமை இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தமைக்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக கொழும்பு பேராயர் இல்லம் தெரிவித்தது.

இது தொடர்பாக பேராயர் இல்லம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தலதாமாளிகை வளாகத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரைப் பார்ப்பதற்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சென்றிருந்ததை மிகவும் தவறான விதத்தில் விளங்கிக் கொண்டு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.



ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தேவாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான அப்பாவி கத்தோலிக்க மக்களே பலியாகினர்.

முஸ்லிம் அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பயங்கரவாதிகளை ஆதரித்தமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முன்னாள் கிழக்கு, மேல் மாகாண ஆளுநர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்காகவே ரத்ன தேரர் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

எனவே இந்தப் போராட்டத்திற்கு கிறிஸ்தவர்கள் என்ற ரீதியில் எமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டியது அவசியமாகும். அத்தோடு சிங்கள, தமிழ், முஸ்லிம் என வெவ்வேறு இன மற்றும் மதத்தைச் சேர்ந்த மக்கள் வாழக்கூடிய அமைதியான நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு நாம் தொடர்ந்தும் எமது ஆதரவை வழங்க வேண்டும்.

ஆனால் நிதி அமைச்சர் மங்கள சமரவீர போன்றவர்கள் இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு பிழையான கருத்துக்களை வெளியிடுகின்றனர். கர்தினால் கண்டிக்குச் சென்றமை பிரிவினையை ஏற்படுத்தும் என்று மங்கள சமரவீர டுவிட்டரில் பதிவிட்டுள்ளமைக்கு கொழும்பு பேராயர் இல்லம் கடும் கண்டனத்தை தெரிவிக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதும் மதப்பிரிவினை இன்றி முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் பேராயர் கர்தினால் அந்த மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருந்தார்.

அத்தோடு பொறுமையுடனும் செயற்பட்டார் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும் என்பதோடு கர்தினாலுக்கு எமது மரியாதையையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அடிப்படைவாதிகள் பட்டியலில் ஹக்கீம் மற்றும் கபீர் இணைவு

### விமலின் கட்சி காட்டம்

(கொழும்பு)

முஸ்லிம் அடிப்படைவாதிகளின் ஆதரவுடன் அமைக்கப்படுகின்ற அரசாங்கத்துக்கு தாங்கள் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர இதனைத் தெரிவித்தார்.

இதுவரையில் முஸ்லிம் அடிப்படைவாத அரசியல்வாதிகள் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஹிஸ்புல்லா, ரிசாத் பதியுதீன் போன்றவர்களது பெயர்கள் மட்டுமே இருந்தன. ஆனால் தற்போது அந்தப் பட்டியலில் ரவூப் ஹக்கீம், கபீர் ஹாசிம் போன்றவர்களும் இணைந்துள்ளனர்.




இனி இவ்வாறான அடிப்படைவாதிகளின் ஆதரவுடன் அமைக்கப்படும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

266



சி. சுந்தரலிங்கம்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

கொழும்பு வாழ் தமிழ்ப் பிரதிநிதிகளையும் ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகள் சிலரையும் இந்தச் சூழ்நிலை இக்கட்டான நிலையினுள் தள்ளியிருக்கும் எனக் கருதலாம்.

சோல்பரி அரசியல் யாப்பையும் சிங்கள ஆதிக்கத்தின் மேலாதிக்கத்தையும் முழு மூச்சாக எதிர்த்த ஜி.ஜி. பொன்னம்பலத்தின் செய்கை தமிழர் தரப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதாவது 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின் ஏற்கனவே 1946 பெப்ரவரி 5 ஆம் திகதி தேர்தல் கூட்டத்தில் பொன்னம்பலம் தமிழர் மத்தியில் முன்வைத்த இளகுநிலை ஒத்துழைப்பு என்ற கொள்கையின் அடிப்படையில் தனது ஆதரவை டி.எஸ். சேனநாயக்கவுக்கு வழங்கியதோடு 1948 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அமைச்சுப் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

பிரித்தானியாவின் புகழ்மிகு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் உயர் கல்வி பெற்று தலைசிறந்த சிவில், குற்றவியல் வழக்கறிஞராகவும் மகாராணியின் வழக்கறிஞராகவும் உயர்ச்சி பெற்ற சி. சுந்தரலிங்கம், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகிய இரு அரசியல் தலைவர்களும் எட்டாம் வகுப்பு வரையுமே கல்வி கற்றிருந்த இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவிடம் அரசியல் போர்க்களத்தில் தோல்வி கண்டதோடு மிகவும் சுலபமாக ஏமாற்றப்பட்டனர் என அரசியல் வரலாறு காட்டுவதை மறுக்க முடியாது.

சோல்பரி அரசியல் யாப்பின் படி 30 பேரைக் கொண்ட மூதவை அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களில் 15 பேர் பாராளுமன்ற உறுப்பினரால் தெரிவு செய்யப்படும் முறையும் ஏனைய 15 பேர் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தேசாதிபதியால் தெரிவு செய்யப்படும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திய டி.எஸ். சேனநாயக்க மேற்படி 30 பேர் கொண்ட மூதவையில் சில சிறுபான்மை அங்கத்தவருக்குப் பொறுப்புள்ள பதவிகளை வழங்கி அவர்களின் ஆதரவையும் ஏற்றுக் கொண்டார்.

பிரதிநிதிகள் சபையிலும் மூதவையிலும் அங்கத்துவம் வகித்த சிறுபான்மையினத்தவரில் கணிசமான பங்கினருக்கு அமைச்சர், துணையமைச்சர் பதவிகளையும் வேறு பொறுப்புமிக்க பதவிகளையும் வழங்கியதன் மூலம் டி.எஸ். சேனநாயக்க எதிர்காலத்தில் தான் மேற்கொள்ளவிருந்த அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக்கள் அதிகம் எழாதபடிக்கு தனது அரசாங்கத்திற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டார் என்பதையும் அதற்குப் பின்னதான அரசியல் நிகழ்வுகள் காட்டி நிற்கின்றன.

சோல்பரி ஆணைக்குழு தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட 15 பேரைக் கொண்ட இரண்டாவது அவை ஒன்றை சிறுபான்மை இனத்தவரின் நிலையைப் பலப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தியது.

சுதந்திரமான பொதுச்சேவை ஆணைக்குழு ஒன்றையும் நீதிச்சேவை ஆணைக்குழு ஒன்றையும் அறிமுகப்படுத்துவதற்கான அமைச்சரவையின் நகல் திட்டத்தையும் சோல்பரி ஆணைக்குழுவினர் அங்கீகரித்திருந்தனர்.

இவ் ஆணைக்குழுக்களின் உறுப்பினர் தேசாதிபதியினால் அவரது விருப்பிற்கிணங்க நியமிக்கப்படவிருந்தனர். இறுதியாக சிறுபான்மை இனத்தினருக்கு எதிராகச் சட்டமியற்றப்படுவதைத் தடுப்பதற்காக ஆணைக்குழு 29 ஆவது ஷரத்தை, விசேடமாக 29(2) எனும் ஷரத்தை அங்கீகரித்திருந்தது.

இந்த ஏற்பாடுகள் யாவும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மைச் சிங்களப் பிரதிநிதிகள் ஒத்தபடி சிறுபான்மையினருக்கு எதிராகச் செயற்படுவதை முழுமையாகத் தடுக்க முடியாதிருந்த போதிலும் பாரபட்சமற்ற ஒரு தேசாதிபதியைக் கொண்ட பாரபட்சமற்ற இடைக்கால உள்ளக சுயாட்சி சட்ட வரையறைக்குள் நடைமுறைப்படுத்தப்படின் அவை பயனளிப்பதாய் அமைந்திருந்தன. ஆனால் இந்த நிலை இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரம் கிடைத்ததும் முற்றுமுழுதாக மாறியிருந்தது.

14 ஒக்டோபர் 1947 இல் சோல்பரி அரசியல் திட்டத்தின்படி கூட்டப்பட்ட முதலாவது பாராளுமன்றக் கூட்டத் தொடரில் ஆரம்பித்து பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள், நிர்வாகக் கட்டுமானங்கள், நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமான பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டு வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று அமுல்படுத்தப்பட்டு வந்தன என்பது முதலாவது பாராளுமன்ற ஹன்சாட்டிலிருந்து 1948 ஆம் ஆண்டின் இறுதிவரையிலான ஹன்சாட் பிரதிநிதிகளை உன்னிப்பாக ஆய்வு செய்த போது காணப்பட்டது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் மூதவை உறுப்பினரும் மிக ஆர்வத்தோடு பாராளுமன்றக் கூட்டத் தொடர்களில் பங்குபற்றியிருந்தமையைக் காணமுடிகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்படும் எனவும் அது 1948 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வழங்கப்படும் எனவும் ஏற்கனவே பிரித்தானிய அரசு டி.எஸ். சேனநாயக்கவுக்கு அறிவித்திருந்தது.

இலங்கை சுதந்திரம் அடையும் நாளில் பிரித்தானிய ஏகாதிபத்தியக் கொடிக்குப் பதிலாக இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றவேண்டும் என்றும் அது சிங்களக் கொடியாகவே இருக்கவேண்டுமெனவும் டி.எஸ்.சேனநாயக்க திட்டமிட்டிருந்தார்.

இதுபற்றிய விவாதம் பாராளுமன்றத்தில் 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தீவிரமடைந்தது. டி.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஏ.ஈ.குணசிங்க போன்றோர் சிங்கக் கொடியையே சகலரும் தேசியக் கொடியாக ஏற்க வேண்டும் எனப் பல வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தனர்.

(தொடரும்)

# சவுதி அரேபிய முதலீட்டாளர்களையே பாசிக்குடா ஹோட்டலில் சந்தித்தேன்

## ஹிஸ்புல்லா தன்னிலை விளக்கம்

(ஏறாவூர்)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர், பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நிலையில், ஹிஸ்புல்லா, சவுதி அரேபிய பிரஜைகள் சிலரைச் சந்தித்து கலந்துரையாடிய காணொலி சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

பாசிக்குடாவிலுள்ள ஹோட்டலொன்றிலேயே கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பலகோணங்களில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை, கிழக்கு ஆளுநராக பதவி வகித்த ஹிஸ்புல்லா வெளிநாட்டுக்குத் தப்பியோட வைத்தார் எனப் பொதுபல சேனா அமைப்பு



குற்றம்சாட்டியிருந்தது.

இந்நிலையில் பாசிக்குடா சந்திப்பு குறித்து விளக்கமளித்துள்ள ஹிஸ்புல்லா;

சவுதி அரேபிய நாட்டைச் சேர்ந்த முதலீட்டாளர்களையே நான் சந்தித்தேன். அவர்களின் நிறுவனம் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டது. எனவே, வர்த்தக நடவடிக்கைகள் சம்பந்தமாகவே கலந்துரையாடப்பட்டது. அங்கு வேறு எதுவும் நடைபெறவில்லை.

உத்தியோகபூர்வமான சந்திப்பே அது. நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவுவதால், பிறிதொரு நாளில் கலந்துரையாடலாம் எனக் கூறிவிட்டு நான் புறப்பட்டேன்.

இதையடுத்து பொலிஸார், சி.ஐ.டியினர், ரி.ஐ.டி.யினரும் ஹோட்டலுக்கு வந்து விசாரணை நடத்தினர். கண்காணிப்புக் கமரா மூலம் பதிவான காணொலிகளும் பெறப்பட்டன.

எனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் போலியானவை. எனவே, அவை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக குழுவொன்றை அமைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரேபியர்களுடன் ஹிஸ்புல்லா; ஐவரிடம் வாக்குமூலம் பதிவு




(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா அரேபிய பிரஜைகள் மூவரை மட்டக்களப்பு - பாசிக்குடா ஹோட்டல் ஒன்றில் சந்தித்து, அவர்களை நாட்டிலிருந்து அனுப்புவதற்கு முயற்சித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு தீவிர விசாரணைகளை ஆரம்பித்தது.

இது தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் வருண ஜெயசுந்தரவின் கீழ், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று ஐவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் குறித்த அரேபிய பிரஜைகளை சந்தித்த மற்றும் அவர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததாகக் கூறப்படும் 5 பேரிடமே முதற்கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டன. இவர்கள் கல்முனை மற்றும் காத்தான்குடி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மருதானையில் மாணவர்கள் எதிர்ப்புப் பேரணி

(மருதானை)

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் இணைந்து மருதானையில் எதிர்ப்புப் பேரணியொன்றை நேற்று முன்னெடுத்தனர்.



மட்டக்களப்பில் அமைந்துள்ள ஷரியா பல்கலைக்கழகத்தை மூடுமாறு வலியுறுத்தியே இந்த எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டதாக மாணவர் ஒன்றியத்தால் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் 500 மாணவர்கள் வரை கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1740

Search for people, places and things

### சிந்துஜன்

அதிகமாக அன்பு இருக்கும் இடத்தில்தான் ஆயிரம் கேள்விகள் கேட்க முடியும்... மற்றவர்களிடத்தில் ஒரு மழுப்பல் பதிலும் உதட்டுச் சிரிப்பும் போதுமானது



### திலோஜன்

இப்பவாவது வண்டிய வோட்டர் வோஷ் பண்ணலாமா? இல்ல மறுபடியும் மழை வந்து சேறாகிடுமோன்னு பாத்து சொல்லு



### குகாஜினி

எவ்வளவு வயசானாலும் இந்த கார்ட்டூன் பார்க்கிற பழக்கம் மட்டும் இன்னும் போகமாட்டேங்கிறது



### அனோஜா

பிறர் மகிழ்ச்சியாக இருக்க எப்போது வழி கண்டுபிடித்துக் கொடுக்கிறீர்களோ அப்போது முதலே நீங்கள் இன்பமாக இருக்க ஆரம்பித்து விடுகிறீர்கள்.




### அனிஸ்ரா

நீங்கள் உள்ளே போகாமல் வெளியே வந்த ஒரே இடம் வைத்தியசாலை மட்டுமே!




### நிலானி

ஏதேதோ கலந்திருக்குன்னு சொல்றாங்க! மீன் சாப்பிடலாமா? வேண்டாமா?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அனைவரதும் பொறுப்பு - நவீன்



(கொழும்பு)

முஸ்லிம் - சிங்கள மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி அரசியல் இலாபத்தை பெற்றுக் கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர். இதனை நாட்டு மக்கள் நன்கு விளங்கிக் கொண்டு தமது செயற்பாடுகளை நிதானத்துடன் முன்னெடுக்க வேண்டும் என்பதுடன் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அனைவரதும் பொறுப்பாகும் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் போன்ற பயங்கரவாதத் தாக்குதலின் பின்னரான காலப் பகுதியில் எந்தவொரு நாட்டிலென்றாலும் இனங் களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்படத் தான் செய்யும்.

எனினும் எமது நாட்டில் தாக்குதலுக்குப் பின்னர் இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் தோன்றியிருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் இலாபத்தை பெற்றுக்கொள்ள விரும்பிய சில தீய சக்திகளினாலேயே மூன்று வாரங்களுக்குப்பிறகு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை குழப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் விரைவான செயற்பாடுகளின் மூலமாக பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் தீவிரவாத தாக்குதலை நடத்திய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் அரசியல் தலையீடுகள் இல்லாமல் சுயாதீனமான முறையில் இரகசியப் பொலிஸாரும் குற்றத் தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் இடம்பெறாமல் நிரந்தரமாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அரசாங்கம் நட்டஈடுகள் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது என தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் போராளிக்கு அஞ்சலி




(ஏறாவூர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் வழங்கற் பகுதிப் பொறுப்பாளர் அஜித்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வெல்லாவெளியில் அமைந்துள்ள மட்டு. அம்பாறை மாவட்டக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதன்போது ஒளிப்படத்திற்கு ஈகச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் வழங்கற் பகுதிப் பொறுப்பாளர் அஜித் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு புதுக் குடியிருப்பில் சுகயீனம் காரணமாக மரணமடைந்திருந்ததோடு, அவரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம்

காலநிலை தாக்கத்தின் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த வேலைத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது.

மகாவலி, களனி, மல்வத்து, ஜின்கங்கை, நில்வளா, அத்தனகலை மற்றும் முந்தெனிய நதி நீரேந்துப் பகுதியைப் போன்று களூஓயா, தெதுறுஓயா, மாஓயா மற்றும் கல்ஓயா நீரேந்துப் பகுதியை உள்ளடக்கிய வகையில் புதிய திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை 8 - 10 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளுக்குள் 3 கட்டத்தில் நிறைவு செய்ய அமைச்சரவையால் இதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய இதன் முதலாவது கட்டம் என்ற ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வெள்ளநீர் தொடர்பில் முழுமையான எச்சரிக்கை விடுத்தல் மற்றும் களனி கங்கை நீரின் அனர்த்தத்தை குறைக்கும் திட்டம் 310 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது. (இ-7)

# சர்வதேச பெண்கள் மாநாட்டில் இலங்கையும் பங்கேற்பு

(வன்கூவர்)

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பிய வன்கூவ ரில் பெண்கள் 2019 மாநாடு இடம்பெற்று வருகின்றது. பெண்கள் மற்றும் சிறுமியர் நல்வாழ்வு, சுகாதாரம் பால்நிலை சமத்துவம், உரிமை குறித்து இப் பெண்கள் மாநாட்டில் ஆராயப்படுகின்றது. 160 நாடுகளை சேர்ந்த 8ஆயிரம் பேர் இதில் பங்கேற்கின்றனர்.

இந்த பெண்கள் மாநாட்டில் ஒரு இலட்சம் வரையிலான பார்வையாளர்கள் கலந்துகொள்கின்றனர். கடந்த திங்கட்கிழமை 03ஆம் திகதி ஆரம்பமான இப் பெண்கள் மாநாடு இன்று நிறைவடைகின்றது.

இப் பெண்கள் மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார கலந்து சிறப்பிக்கின்றார்.

இப் பெண்கள் மாநாட்டில் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள், உலகத்தலைவர்கள், சட்டத்தரணிகள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், அறிவு சார் குழுக்கள், பெண்கள் உரிமை அமைப்புக்கள் உட்பட பலர் கலந்துகொள்வர்.

கனடாவின் பெண்கள் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கான அமைச்சர் மரியம் மொன்செவ் 20 நட்பு நாடுகளை சேர்ந்த அமைச்சர்களுடன் இணைந்து அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தை நடத்துகிறார். (இ-7)

# செய்தித்துளிகள்

## காரிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

(அத்துருகிரிய)

அதுருகிரிய பகுதியில் வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த காரிலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய - சங்தோரிஸ் ஜயந்தி மாவத்தையில் கார் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் பொலிஸார் குறித்த காரை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது சாரதி ஆசனத்தில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப் பட்டது. (இ-7)

## முற்றாக அகற்றப்பட்ட எண்ணெய்க் கழிவுகள்



(கல்கிஸை)

வெள்ளவத்தை தொடக்கம் கல்கிஸை வரையான கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட எண்ணெய்க்கழிவுகள் முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக கரையோர பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்தது.

அத்தோடு தற்போது குறித்த கடல் கரையோரப் பகுதிகளைப் பொதுமக்கள் பயன்படுத்தலாமென கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

வெள்ளவத்தை முதல் கல்கிஸை வரையான கரையோர பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் எண்ணெய்க் கழிவுகள் ஒதுங்கியிருந்தன.

இதன் காரணமாக அப் பகுதியில் உள்ள பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்தது. (இ-7)

## நாட்டின் பல பாகங்களில் டெங்கு நோய்த் தாக்கம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பெய்யும் மழை வீழ்ச்சியின் காரணமாக சில பகுதிகளில் டெங்கு அபாயம் காணப்படுகின்றன.

இந்நிலையில் கொழும்பை அண்டிய பகுதிகள் மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் டெங்கு காய்ச்சலால் பாதிக் கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்குக் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

அத்தோடு டெங்கு நோய்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் டெங்கு ஒழிப்பு பிரிவினர் ஈடுபட்டு வருவதாக வைத்திய நிபுணர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 110 | 60 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 180 | 200 |
| தக்காளி | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 130 | 100 |
| கோவா | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 120 | 160 | 80 | 240 |
| பூசணி | 100 | 70 | 50 | 80 |
| புடோல் | 80 | 90 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 50 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 180 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 80 | 120 |
| பாவற்காய் | 160 | 200 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 140 | 80 | 80 |
| லீக்ஸ் | 40 | 90 | 90 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 180 | 100 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 160 | 100 | 160 |
| போஞ்சி | 250 | 220 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 60 | 80 |
| கீரை-1பிடி | 40 | 15 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 180 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | – | 120 |

# சிறுவர் அரங்கம்

## உனக்கு எது சொந்தம்?



ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு அரசனாம். அவனுக்குத் தான் அரசனாகவும் இருக்க வேண்டும் அதே நேரத்தில் ஆன்ம இலாபம் தரும் ஞான வினையையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் தணியாத ஆவல். உடனே அமைச்சரைக் கூப்பிட்டு, "நம் நட்டிலுள்ள குருமார்கள் இங்கு அரண்மனைக்கு வந்து தங்களுக்குத் தெரிந்த ஞான வித்தைகளை எனக்குப் பயமின்றி உபதேசிக்கலாம். அப்படிச் செய்யும் உபதேசங்களில் என் மனதைக் கவரும் உபதேசம் எதுவோ அதற்கு, உபதேசித்தவர் கேட்பதைப் பரிசிலாகத் தருவோம்" என பறையறிவிக்கச் சொன்னான்.

வாயிலில் ஒரு ஆராய்ச்சி மணியையும் கட்டினான். வந்தவர்கள் மணியை அடிக்க, அமைச்சர் அவர்களை அழைத்துப் போய் நீராட, உண்ண, உடுக்க எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து அரசவைக்கு இட்டுச் செல்வார்.

இதைக் கேள்வியுற்ற குருமார்களும் அறிஞர்களும் அரசவை சென்று தங்களுக்குத் தெரிந்தவற்றை உபதேசிக்க மன்னனுக்குத் திருப்தி இல்லை. அவர்களையெல்லாம் விருந்தினர் மாளிகையிலேயே சிறை வைத்துவிட்டான்.

அவ்வூரில், ஒரு சிற்றூரில் அட்டகோணலுடன் விகாரமான சிறுவன் இருந்தான். பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் அவனை உன் தந்தை யாரெனக் கேலி பேச, வீட்டுக்கு வந்தவன் அன்னையிடம், "என் தந்தை எங்கே?" எனக் கேட்டான். "அப்பா மகனே! உன் தந்தையை அரசன் சிறை வைத்துள்ளான்" என முழுக் கதையையும் கூற, "அம்மா! நான் போய் அப்பாவை மீட்டு வருகிறேன்" எனத் தாய் தடுத்ததையும் மீறிக் கிளம்பி அரசவை வந்தான். அவன் உருவையும் வயதையும் கண்டு எல்லோரும் எள்ளி நகையாடினார்கள்.

எல்லோரும் நகைத்ததைக் கண்ட சிறுவன் அரசனை நோக்கி, "ஏன் சிரித்தீர்கள்? என் உருவைக் கண்டா? அல்லது சிறுவனா நமக்கு உபதேசம் செய்யப் போகிறான்? என்று என் வயதைக் கண்டா?" என்று கேட்டான். ஒருவரும் பதில் பேசவில்லை.

பின்னரும் அரசனை நோக்கி,"அரசே! ஏன் நகைத்தீர்? குயவனைப் பார்த்து நகைத்தீரா? அல்லது பாண்டத்தைப் பார்த்து நகைத்தீரா? என வினவினான். அரசனுக்குக் குயவன் என்றால் யார்? பாண்டம் என்றால் எது? எனப் புரியவில்லை. சிந்தை மருண்ட மன்னனோ, உடனே சிறுவனை நோக்கி, "எனக்கு ஞான உபதேசம் செய்வித்து அருளல் வேண்டும். தங்களின் சித்தம் என்னவோ அதுபோல் நான் நடக்கிறேன்" எனக் கேட்டுக் கொண்டான்.

அதற்கு, சிறியவன், "அரசே! நீ உனக்குச் சொந்தமாக எண்ணியிருப்பதை எனக்குத் தானம் செய். பின்னர் உபதேசிக்கிறேன்" என்றான்.

அரசன்:கழுத்தில் கிடந்த விலையுயர்ந்த மணி மாலையையும் என் ஆபரணங்களையும் தந்துவிட்டேன் என்றான்.

சிறுவன் : "இவையெல்லாம் உன் பிள்ளைகளுக்குரியது. உனக்கல்ல. எனவே வேண்டாம்"

அரசன்: "இந்த நாட்டையே தருகிறேன்"

சிறுவன்: "இந்த நாடு மக்களுக்குச் சொந்தம். இதுவும் வேண்டாம். உனக்குரிய, சொந்தமான பொருளை உணர்ந்து கொடு"

அரசன்: "என் உடல் எனக்குத்தன் சொந்தம். அதைத் தருகிறேன்"

சிறுவன்: "உன் உயிர் பிரிந்ததும், அது மண்ணுக்குச் சொந்தம். நீ தூங்கும் போது, உன் உடலின்மேல் ஒரு பாம்பு ஊர்ந்தாலும் உனக்குத் தெரிவதில்லையே? அப்படி இருக்க உனக்கு அது எப்படிச் சொந்தம்?"

இப்படியே ஒவ்வொன்றையும் சிறுவன் மறுத்துச் சொல்ல அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள். தந்து விடுகிறேன் என்றான்.

"உன் மனம்தான் உனக்குச் சொந்தம். எல்லோர் முன்னிலையிலும் தானம் கொடு" என்றான் சிறுவன்.

அப்படியே தான சம்பிரதாயங்கள் முடிவடைய சிறுவன் வெளியில் புறப்பட்டான். அரசன் சிறுவனை நோக்கி, "குருவே! உபதேசம் செய்யாமல் செல்லுகிறீர்களே!" என வினவ அச் சிறுவன் "அரசே! உன் மனதை எனக்குத் தானம் செய்தது உண்மையில்லை. இன்னும் உன் மனம் உன்னிடமே இருக்கிறது. எப்படி நான் உபதேசிக்காமல் செல்வதை நீ எப்படி உணர்ந்து கேட்டாய்?" என்றான்.

அரசன் திடுக்கிட்டு வணங்கி, "குருவே! உங்களின் ஆணைப்படியே நடக்கிறேன். இனி என் வசம் ஏதுமில்லை" என்றான்.

'சிறைபிடித்தவர்களை விடுதலை செய்க" என்றான் சிறுவன். அப்படியே நடந்தது. பின்னர் சிறுவன் உபதேசித்தான்.

என்ன உபதேசித்திருப்பான்?

"அரசே உருக்கண்டு எள்ளாமை வேண்டும். உன் உடலில் உயிர் உள்ளவரை உனக்கு உன் மனம் மட்டுமே சொந்தம். அதுவும் உணர்வு இருக்கும்போது மட்டுமே. தூங்கும்போது மனம் உனக்குச் சொந்தமல்ல. ஆகவே, உணர்வால் மனத்தை அடக்கு.

எப்பொழுதும் நீ உன் உணர்விலேயே நில். அது உனக்கு இறைவனை அடைய வழிகாட்டும்"

## பொது அறிவுத் துணுக்குகள்

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா தொடங்கப்பட்ட ஆண்டு. 1958.
- 'குளோரின்' என்பது கிரேக்க மொழி வார்த்தையாகும்.
- தீக்குச்சியைக் கண்டுபிடித்தவர். லேண்ட் ஸ்டார்ம்.
- குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் வாயு. அமோனியா.
- எந்த அமிலத்தாலும் கரைக்க முடியாத உலோகம், பிளாட்டினம்.
- 'இங்பேனா'வைக்கண்டுபிடித்தவர். லீவிஸ்வாட்டர்மேன்.
- மிக விரைவில் ஆவியாகும் திரவம். அற்கஹோல்.
- காற்றிற்கும் அழுத்தம் உண்டு எனக் கண்டுபிடித்தவர். டாரி செல்லி.

"தலைவரே! நீங்க இப்ப சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை...!"

"சரியான ஜால்ராய்யா நீ! இப்ப நான் ஒண்ணுமே சொல்லலை.... கொட்டாவி தான் விட்டேன்...!"



வந்தவர்: ஏங்க அந்தப்பொடியனை வேலைய விட்டு தூக்கிட்டீங்க?

ஹோட்டல் முதலாளி: பின்ன என்னாங்க, சாப்பிட வந்தவங்க "டிபன் ரெடியா?"ன்னு கேட்டா "நேற்றே ரெடி" ங்கறான்!

## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



நாம் எல்லோரும் நிலவைப் போன்றவர்கள். அதற்கு இருளான ஒரு பக்கமும் உண்டு.
~ ஹிட்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சீயோன் தேவாலயக் குண்டுவெடிப்பு மேலும் ஒரு உயிரைக் காவுகொண்டது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களில் மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் உயிரிழந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த அருண் பிரசாத் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிசிச்சைப் பிரிவில் சிசிச்சை பெற்றுவந்தார்.

இந் நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில், ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி மேலதிக சிசிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு 47 நாட்களாக தொடர்ச்சியாக சிசிச்சையளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

மட்டக்களப்பு இருதயபுரத்தைச்சேர்ந்த செ.அருண் பிரசாத் (வயது-30) எனும் வெல்டிங் கடை உரிமையாளரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையிலுள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பிரபல நட்சத்திர விடுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் 250 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருந்ததுடன் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிக்சை பெற்று வருகின்றனர்.

எனினும் சிகிச்சை பலனளிக்காது மேலும் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தியாகத்தை வியாபாரமாக்கிய வினைதீர வாய்ப்பு உண்டோ!

முஸ்லிம் அமைச்சர்கள், ஆளுநர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வரவேற்கப்பட வேண்டியவை.

தங்கள் இனத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்வோம் என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகள் நிரூபித்துள்ளனர் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கூறிய கருத்துக்கள் யதார்த்தமானவை.

முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றுபட்டு, ஒருமித்து பதவி விலகுவதென எடுத்த தீர்மானம் மிக உச்சமானது.

இந்நாட்டின் சிறுபான்மை இனமாக இருக்கக்கூடிய முஸ்லிம் இனத்தின் அரசியல் தரப்பு; தக்க நேரத்தில் ஒன்றுபட்டு எடுத்த தீர்மானம் இலங்கை அரசுக்கும் பௌத்த பீடங்களுக்கும் ஏன் ஒட்டுமொத்த சிங்கள இனத்துக்கும் மிகப்பெரும் இக்கட்டை, தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டது.

இந்த இக்கட்டான நிலைமை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் இலங்கைக்கு பெரும் அழுத்தங்களை அவமானங்களை கொடுக்கவே செய்யும்.

உங்கள் நாட்டில் தேரர்கள் உண்ணாவிரதமிருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் பதவி விலக வேண்டும் என்றொரு அரசியல்யாப்பு எழுதாயாப்பாக இருக்கிறதா? என்று சர்வதேசம் சிரித்தபடி இலங்கை அரசிடம் கேட்கும்.

எனினும் இவ்வாறு இலங்கை அரசுக்கும் சிங்கள பௌத்த அரசியல்வாதிகளுக்கும் மிக நெருக்கடியான சூழ்நிலையை ஏற்படுத்தியது முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒற்றுமை என்பதைக் கூட, எங்கள் தமிழ் அரசியல் தரப்பால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் இந்த இடத்தில் ஓர் உண்மையை யதார்த்தத்தை பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் பட்டவர்த்தனமாகக் கூறியிருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

ஒருபோதும் ஒற்றுமைப்படாத தமிழ் அரசியல் சூழமைவில் நின்று கொண்டு முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒற்றுமையை வியந்து கூறுவ்தென்பது சொந்த வீட்டில் புயலைக் கிளப்புவதாக அமையும்.

இருந்த போதிலும் அதுபற்றியெல்லாம் கவலையில்லாமல் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்கள் இனத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் எனக் கூறுவதனூடு எங்கள் இனத்தில் அவ்வாறு இல்லையே என்பதை பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் மறைமுகமாகச் சுட்டியுள்ளார்.

எதுஎவ்வாறாயினும் இராஜதந்திரத்துடனும் இனப்பற்றோடும் ஒற்றுமையோடும் செயற்பட்டால், சிறுபான்மை இனத்தால் பெரும்பான்மை இனத்தை தலைகுனிய வைக்க முடியும் என்பதை உலகுக்கு நிரூபித்துக் காட்டிய பெருமை இலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகளையே சாரும்.

இதைக்கூறும்போது நாம் என்ன செய்ய முடியும். தமிழ் இனத்துக்காகத் தியாகம் செய்தவர்களை வைத்து அரசியல் வியாபாரம் நடத்த தமிழ் அரசியல்வாதிகள் என்று தயாரானார்களோ; அந்தத் தமிழ் அரசியல்வாதிகளை நம்பி தமிழ் மக்கள் என்றைக்கு வாக்களித்தனரோ அன்றைக்குப் பிடித்த நாசம் இன்னும் அரசியல் கடையைப் பூட்ட முடியாமல் உள்ளது.

# எவரையும் பாதுகாப்பதற்காக நாம் பதவிகளைத் துறக்கவில்லை

## கபீர் ஹாசீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மீது ஏற்பட்டுள்ள மக்களின் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகவே பதவிகளை இராஜினாமா செய்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபிர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எவரையும் பாதுகாப்பதற்காக தங்களின் அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில், நாட்டின் எதிர்காலம் சிக்கல் நிலையைச் சந்தித்துள்ளது. இதனை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினை எழுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நாங்கள் எவரையும் பாதுகாக்க எண்ணவில்லை. நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்தோம். நாட்டை பாதுகாக்க வேண்டியதே அவசியமாகும்.

எனவே, பாதுகாப்புத்துறையின் விசாரணைகளுக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் இடமளிப்பதில்லை என்று குற்றஞ்சுமத்தியமை மற்றும் இது குறித்து மக்களிடையே எழுந்துள்ள சந்தேகத்தை தீர்த்துவைப்பதற்காகவே நாங்கள் பதவிகளை இராஜினாமா செய்தோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஈஸ்டர் தினத் தாக்குதல்களில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ் மற்றும் அசாத் சாலி ஆகியோர் தொடர்புபட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையில் அவர்களைப் பதவி விலகுமாறு பரவலாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உட்பட முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறும்

## மனுஷ நாணயக்கார எம்.பி. நம்பிக்கை

ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் அமைச்சு பதவிகளை துறந்துள்ளார்களே தவிர, அவர்கள் அரசாங்கத்தில் இருந்து வெளியேறவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணியினால் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின் போது அரசாங்கதின் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்போம். இந்த பிரேரணை அரசாங்கத்துக்கே சாதகமாக அமையும். பதவி விலகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-03)

# மைத்திரி - ரணில் ஆட்சி தொடர்ந்தால் நாட்டை ஐ.எஸ் ஆக்கிரமித்து விடுவார்கள்

## பவித்ரா வன்னியாராச்சி தெரிவிப்பு

மைத்திரி-ரணில் ஆகியோரின் முறையற்ற நிர்வாகம் மற்றும் அரசியல் போட்டித் தன்மை காரணமாகவே சர்வதேச தீவிரவாதம் நாட்டுக்குள் ஊடுருவியது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி, இவ்விருவரின் ஆட்சி மீண்டும் தொடர்ந்தால் ஐ.எஸ். தீவிரவாதிகள் அரசாங்கத்தின் ஆதரவுடன் நாட்டை ஆக்கிரமித்துக் கொள்வார்கள் எனவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகம், தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்ட நல்லாட்சி அரசாங்கத்தில் இவையிரண்டும் முழுமையாக கிடைக்கப் பெற்றதா? எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார். (ம-03)

# ஐ.ம.சு.கூட்டமைப்பிற்கும் பெரமுனவிற்குமிடையே இன்று பேச்சுவார்த்தை

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், கூட்டணி தொடர்பான மற்றுமொரு பேச்சுவார்த்தை இன்று இடம்பெறவுள்ளதென ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. எனினும் இரு தரப்பிலும் உள்ள சில கருத்து வேறுபாடுகள் காரணமாக தீர்வொன்று எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. எனவே இதனை இழுத்தடித்துக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. இன்று இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின் பின்னர் இம்மாத இறுதிக்குள் ஸ்திரமான முடிவொன்று எடுக்கப்படும்.

முன்னாள் அமைச்சர் ரிஷாத்தை பதவி விலகுமாறு கோரியதற்காக அனைத்து முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் பதவி விலகியுள்ளமை குறித்து சுதந்திர கட்சியின் நிலைப்பாடு என்ன என்று கேட்டதற்கு, அவர்கள் பதவி விலகியதில் எமக்கு எந்த பிரச்சினையும் கிடையாது. ஆனால் இந்த ஒற்றுமை நாட்டில் மீண்டும் அடிப்படைவாதமும், அதனால் உருவாகும் பயங்கரவாதமும் இல்லாதொழிக்கப்படுவதற்கு உதவ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என அவர் பதிலளித்திருந்தார். (ம-03)

# சத்திய தரிசனம்

## குறுக்குவழி வேண்டாமே!



❖ நமக்கு எது வேண்டுமோ அதை கடவுளிடம் கேட்பதில் தவறில்லை. கடவுள் உங்களுடைய தகுதிக்கு ஏற்பக் கொடுத்தருள்வான்.

❖ நல்லவழியில் பொருள் தேடி வாழும் வாழ்க்கையே சிறந்தது. குறுக்குவழியில் பணம் சம்பாதிக்கலாம். ஆனால், அதோடு அவமானமும், அவப்பெயரும் சேர்ந்தே வரும்.

❖ பெற்றவர்கள், குழந்தைகளின் உள்ளத்தில் அன்பை விதைக்க வேண்டும். இதனால் பகையுணர்வு மறைந்து சமுதாயத்தில் ஒற்றுமை தழைக்கும்.

❖ நாவைக் கட்டுப்படுத்தப் பழகுங்கள். எளிய உணவையே விரும்பிச் சாப்பிடுங்கள். இனிமையாகப் பேசப் பழகுங்கள்.

❖ பணம், அதிகாரம் ஆகியவை நமது கட்டுக்குள் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அகம்பாவத்தால் வாழ்வு சீர்குலைந்து விடும்.

❖ அன்பில்லாத இதயம் வறண்ட பாலைவனத்திற்குச் சமம். இறைவன் அன்பு மயமாக இருக்கிறார். எல்லா உயிர்களையும் நேசிக்கவேண்டியது மனிதனின் அடிப்படை கடமை.

# தூயஒளி வெற்றிக்கிண்ணம்; பாடும்மீன் அணி வெற்றி



தூயஒளி கிண்ண உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பாடும்மீன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

யாழ்.லீக்கின் அனுமதியுடனும் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடனும் குருநகர் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 33 வது நினைவாக நடத்தப்படும் தூய ஒளி போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியினரும் ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணியினரும் மோதியதில் பாடும்மீன் அணியினர்4-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுப்போட்டிக்குத் தகுதி பெற்றனர்.

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலியும் தொடர்ந்து கடற்கரை வீதியில் அமைந்துள்ள 31 மீனவர்களின் நினைவுத்தூபியில் வழிபாடும், அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெறும் என செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க-106)

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு - III ஸ்ரான்லி அணி 2 இலக்குகளால் வெற்றி



ஸ்ரீலங்கா கிரிக்கெட் வருடா வருடம் நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட தொடரின் முதலாவது போட்டியில் ஸ்ரான்லி அணி, யாழ்.பல்கலைக்கழக அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று தங்களது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துள்ளது. யாழ். பல்கலைக்கழக அணி 24.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களை பெற்றது.

டாணுஸன்-16, செந்தூரன்-11 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் விதூஷன்-05, மதன்-03, விஷ்ணு-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 24.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களை பெற்றது.

ஜெனஸ்ரின்-63, தனுசன்-10 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் லோகதீஸ்வர்-03,தனுஸ்கா பண்டார-02, துவாரகசீலன், தபேந்திரன், செந்தூரன் தலா - 01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 10 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு ஸ்ரான்லி அணி 7.07 புள்ளிகளையும் யாழ்.பல்கலைக்கழக அணி 1.86 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)


# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணி



ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தால் வடமாகாண ரீதியில் நடத்தி வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கலைமகள் அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 03:02 என்ற கோல் கணக்கில் சுப்பர்றாங் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக சுப்பர்றாங் அணியின் கபில் தெரிவு செய்யப்பட்டார். (க)

# 17 வயதிற்குட்பட்ட எறிபந்தாட்ட போட்டி கோட்டைகட்டியகுளம் ம.வி. சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான எறிபந்தாட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான எறிபந்தாட்ட இறுதியாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய அணி 25:23, 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

# பெண்களுக்கான எறிபந்தாட்டம் தெல்லிப்பழை யூனியன் சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான எறிபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான எறிபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் முதலாவது செற்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:10 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இரண்டாவது செற்றில் இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மூன்றாவது செற்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதேவேளை 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான எறிபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆண்கள் அணி 25:23, 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

## 45ஆவது...

பொன்.சிவகுமாரனின் உருவப்படத்துக்கு மலர் தூவி சுடர் ஏற்றி மாணவர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர். (ம-9)

## எட்டு மாத...

தாபமாக உயிரிழந்துள்ளது.

பூநகரி பள்ளிக்குடாவை சேர்ந்த எட்டு மாதங்களேயான சிவேந்திரராசா துர்கேசன் என்ற குழந்தையே மேற்படி உயிரிழந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை குழந்தைக்கு வயிற்றோட்டம் காரணமாக அன்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த குழந்தை நீரிழப்பு ஏற்பட்டு நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## அடிப்படைவாதி...

மைத்திரிபால சிறிசேனவிடம் அமைச்சர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்கு தான் ஒருபோதும் பின்னிற்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் நாளை ஜனாதிபதி செயலகத்திற்கு விசேட கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சரவை அமைச்சர்களும் பங்குகொள்வதற்கான வாய்ப்புள்ளதாக இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில், தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றைக் காண முடியும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, போலி செய்திகள் மற்றும் பிரசாரத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில், தண்டனை சட்ட சரத்துகள் மற்றும் குற்றவியல் சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி போலி செய்திகள் மற்றும் போலி பிரசாரம் தொடர்பில் குற்றவாளியாக அடையாளம் காணப்படுபவருக்கு 10 லட்சம் ரூபாய் வரையில் அபராதம் விதிப்பதற்கு அல்லது 5 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிப்பதற்கு அல்லது அந்த இரண்டு தண்டனைகளையும் வழங்குவதற்கு ஏற்ப சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் வெறுப்புணர்வு பிரசாரம் தொடர்பிலும் சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையிலான சட்டத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி குற்றம் நிரூபிக்கப்படுகின்றவருக்கு அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் சட்டங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளது. (ம-3)

## இந்து கற்கைகள்...

11ஆவது பீடமாக இந்து கற்கைகள் பீடம் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

இந்து நாகரிகத்துறை, சைவ சித்தாந்தத் துறை, சமஸ்கிருதத்துறை ஆகிய மூன்று துறைகள் இந்து கற்கைகள் பீடத்தில் உள்ளடங்குகிறது. (ம-3)

## சந்தேகத்தை...

ராஜினாமா செய்யவில்லை. மாறாக பாதுகாப்புத் துறையின் விசாரணைகளுக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் இடமளிப்பதில்லை என்று குற்றம் சுமத்தியமை மற்றும் இது தொடர்பில் மக்களிடையே எழுந்துள்ள சந்தேகத்தை தீர்த்து வைக்கவே பதவிகளை ராஜினாமா செய்தோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் கபிர் ஹசீம் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் சிக்கல் நிலையை சந்தித்து வருகின்றது. இதனை தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினை எழுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகிறது. எனவே இவ்வாறான ஒரு சூழ்நிலைமையில் நாங்கள் எவரையும் பாதுகாக்க எண்ணவில்லை.

நாட்டின் எதிர்காலத்தை பற்றியே சிந்தித்தோம். நாட்டை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## மீண்டும் இன்று...

இதற்கமைய இன்றைய தினம் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோரிடம் சாட்சி கோரப்படவுள்ளதாக அந்தக் குழுவின் உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த குழுவில் பயங்கரவாத தடுப்புப் பிரிவிற்கு பொறுப்பான முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா சாட்சியளித்திருந்தார்.

முன்னதாக பாதுகாப்பு செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் சாந்த கோட்டேகொட மற்றும் தேசிய புலனாய்வு பிரதானி ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சிசிர மெண்டிஸ் ஆகியோர் விசேட தெரிவுக்குழு முன்பாக சாட்சி வழங்கியிருந்தனர். (ம-3)

## பௌத்த பீடங்...

மூன்று பௌத்த பீடங்களை சேர்ந்த மகாநாயக்க தேரர்கள், கண்டி அஸ்கிரிய மகா விஹாரையில் தீர்மானமிக்க கலந்துரையாடலில் நேற்று மாலை ஈடுபட்டனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொடு ஸ்ரீ ஞானரத்தன தேரரின் தலைமையில், நேற்று பிற்பகல் 2 மணியளவில் மகா சங்கத்தினர் கூடினர்.

இதன்போது, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் 15 விடயங்களின் கீழ் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சில விடயங்கள் தொடர்பில் முதற்கட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், ஒன்றிணைந்த அறிக்கையொன்றையும் மகா சங்கத்தினர் வெளியிடவுள்ளனர்.

நேற்று எட்டப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில், மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் நியங்கொட ஸ்ரீ விஜிதசிறி தேரர் ஊடகங்களுக்கு பின்வருமாறு கருத்து தெரிவித்தார்

சிங்களம், தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்ற ஸ்திரமான தகவலை உறுதிப்படுத்துவதற்கே எதிர்பார்க்கின்றோம்.

அதுவே எமது கோரிக்கையாகும். தற்போதைய அரசாங்கத்தில் இருந்து முஸ்லிம் அமைச்சர்கள் விலகியமை, இடம்பெற்றிருக்கக்கூடாத ஒரு விடயமாகும். அதனால் தங்களின் பொறுப்புக்களை ஏற்குமாறு குறித்த தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அந்த தலைவர்களுடன் கலந்துரையாடுவதற்கான தீர்மானத்தையும் நாம் எடுத்துள்ளோம். அத்துடன், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள பிரமுகர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் இருப்பின், தாம் சுற்றவாளிகள் என்பதை அரசிற்கும் பாதுகாப்பு பிரிவிற்கும் நிரூபியுங்கள். இந்த நிலைமையை நாம் புரிந்து செயற்படாவிடின், வெளியே இருந்து எமது நாட்டிற்கு அழுத்தங்கள் நிச்சயமாக விடுக்கப்படும். எமது நாட்டின் அமைதி சீர்குலைக்கப்பட்டு பாரிய அபாயத்தை நாம் எதிர்நோக்க நேரிடும் என்றார். (ம-3)

## ரிஷாத்துக்கு எதி...

ஆதாரங்கள் கைவசம் இருக்கின்றன

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல்வீரவன்ஸ எம்.பி. கூறியுரைத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அரசியல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் விமல் வீரவன்ஸ மேலும் கூறியதாவது,

"முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை இன்னும் சில நாட்களில் நிரூபித்துக் காட்டுவேன்.

21/4 தாக்குதலுக்கு சதொச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சாய்ந்தமருதுவிலுள்ள சஹ்ரானின் வீட்டுக்கும் வாகனங்கள் சென்றுள்ளன.

இவ்வாறு நடக்கவில்லையென்றால், நான் கூறுவது பொய்யெனில், "இல்லை" என பகிரங்கமாக அறிவிப்பொன்றை விடுக்குமாறு ரிஷாத்துக்கு சவால் விடுக்கின்றேன்.

தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் துறக்கத் தயார் என ரிஷாத் அறிவிப்பாரானால், நாளையே ஆதாரங்களை அம்பலப்படுத்துவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்." என்றார் விமல் வீரவன்ஸ. (ம-3)

## முல்லைத்தீவு...

ஆலயம் சூழல் குருகந்த ரஜமஹா விகாரை அமைந்துள்ள பகுதியாகும். இந்த ஆலயப் பகுதியில் அரசியல்வாதிகள் பிரச்சினைகளை ஏற்படுத்தி குழப்பங்களை உண்டு பண்ணுகின்றனர். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலையீடு செய்து எமக்கு ஒரு தீர்வை பெற்றுத்தர வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

"அத்துமீறி விகாரை அமைக்கப்பட்டுள்ள நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்ளவும் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்று அனுமதி வழங்கியிருந்தது. இரண்டு தரப்பினரும் அமைதிக்கு பங்கம் இன்றி வழிபாடுகளை மேற்கொள்ளுமாறும் நீதிமன்று கட்டளையிட்டது.

இந்த நிலையில் மீண்டும் நேற்றைய தினம் பௌத்த பிக்குகளும் சிங்களவர்கள் சிலரும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர். (ம-3.28)

## இலங்கை முன்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துமாறு தொடர்ந்தும் இலங்கையை வலியுறுத்தப் போவதாகவும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

2018 இல் இலங்கையில் மனித உரிமை நிலவரத்தில் முன்னேற்றங்களும் காணப்பட்டன. பின்னடைவுகளும் காணப்பட்டன என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இனங்களிற்கு இடையிலான பதட்டம், நல்லிணக்கத்துடன் தொடர்புபட்ட முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில் மந்தநிலை, புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதில் தாமதம் மற்றும் நிலைமாற்று நீதிக்கான செயற்பாடுகள் முடங்கியுள்ளமை ஆகியனவே கரிசனைக்குரிய விடயங்கள் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இலங்கையில் 51 நாட்கள் நீடித்த அரசியல் நெருக்கடி இவற்றை நடைமுறைப்படுத்துவதை தடுத்துள்ளது எனவும் பிரித்தானியா தனது மனித உரிமை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் உருவாகிய அரசமைப்பு நெருக்கடி இலங்கையில் சுயாதீன ஸ்தாபனங்களின் முக்கியத்துவத்தை புலப்படுத்தியுள்ளதாகவும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இக்காலப்பகுதியில் ஊடகவியலாளர்களும் சிவில் சமூகத்தினரும் அச்சுறுத்தப்படுவது அதிகரித்தது எனவும் குறிப்பிட்டுள்ள பிரித்தானியா, கடந்த வருடம் முழுவதும் இலங்கையின் வடபகுதியை சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கண்காணிக்கப்படுவது துன்புறுத்தப்படுவது குறித்த கரிசனைகளை அதிகமாக வெளியிட்டனர் எனவும் தெரிவித்துள்ளது. (ம-3)

# கூட்டணி தொடர்பில் தீர்க்கமான முடிவு

## மகிந்த அமரவீர



பரந்துபட்ட கூட்டணி அமைப்பது தொடர்பாக இன்று இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தை தீர்க்கமானதாக அமையும் என எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்த கூட்டணி தொடர்பாக இம்மாத இறுதிக்குள் ஸ்திரமான முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரு தரப்பினரும் இணைந்து கூட்டணி அமைப்பது தொடர்பாக பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் 5 ஆம் கட்ட பேச்சுவார்த்தை இன்று இடம்பெறவுள்ளதாக அவர் கூறினார்.

ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இரு தரப்பிலும் சில கருத்து வேறுபாடுகள் இருந்தமை காரணமாக தீர்வொன்று எடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே தேர்தல் நெருங்கும் நிலையில் கூட்டணி தொடர்பாக இழுத்தடிப்பு இன்றி தீர்க்கமான முடிவு இம்மாத இறுதிக்குள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

# ஹெரோயினுடன் மௌலவி உட்பட

## ஆறு பேர் கைது

கடற்படையின் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையின் போது மௌலவியொருவர் உட்பட ஆறு பேர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி, புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் கடற்படையின் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டிருந்தது. இதன்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம-3)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 05-06-2019
சீட்டிழுப்பு இலக்கம் 945
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 1 6 8 2 6 7

தன நிதானய
திகதி 2019-06-05
சீட்டிழுப்பு இலக்கம் 151
F 02 08 54 72

கொவிசெத
திகதி 2019.06.05
சீட்டிழுப்பு இலக்கம் 2139
M 08 50 57 65

மெகா பவர்
திகதி 05/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 389
0 25
வெற்றி இலக்கங்கள் 16 30 40 47

## வேலைவாய்ப்பு

நீங்கள் O/L, A/L படித்துவிட்டு எந்த வேலையும் இன்றி இருக்கின்றீர்களா?
இன்றே எம்முடன் இணையுங்கள்.
கைநிறைய உழைப்பதற்கு நாம் உங்களுக்கு உதவுவோம்.

- சர்வதேச கம்பனியில் பணி புரியலாம்.
- தங்குமிட உணவு வசதிகள் உண்டு
- பல தரப்பட்ட பதவிகள்
- வட மாகாணத்தினருக்கு முன்னுரிமை
- வெளிநாடு செல்லும் வாய்ப்புண்டு

(9045)

077 123 7692



## வேலைவாய்ப்பு

Marketing Management Trainee, North Province The Inner Circle (Pvt) Ltd.

Inner Circle



தகைமைகள்

- ஆகக்குறைந்தது சா/தரத்தில் 6 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.
- வயதெல்லை 18 - 25
- முன் அனுபவம் அவசியமற்றது.

ஆரம்ப வருமானமாக 24500 - 45000 + EPF, ETFவுடன் விசேட கொடுப்பனவுகள், தங்குமிட வசதி, மருத்துவ வசதி செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: (9044)

076 770 7759, 077 999 4807


## கொழும்பில்...

துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஏக்கல - மஹாவத்தை பகுதியில் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பாதாள உலக குழு உறுப்பினர் மினுவாங்கொட களு அஜித் என்பவர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்களே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## வடக்கு கிழக்கைச் சேர்ந்த...

களை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் வழங்கி வைப்பர்.

"வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் தரம் IIIஇற்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் வேண்டுகோளுக்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு கடந்த மார்ச் 14ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

அதற்கு அமைய வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் ஆயிரத்து 302 பேர் பங்குபற்றினர். அவர்களில் அமைச்சரவையால் முன்வைக்கப்பட்ட தகமைகளை முழுமை செய்த ஆயிரத்து 130 தொண்டர் ஆசிரியர்களுக்கு வரும் 29ஆம் திகதி நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்படும்" என்று கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம-3)


## ரோமானியா வேலைவாய்ப்பு

கட்டடவாக்கப் பணியாளர்கள்

சம்பளம் ரூ.87,500 - ரூ.92,250

உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் வழங்கப்படும்

எமரல்ட் ஐல் License No. 2268

077 00 38 215
0777 324 004
021 2219 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lovers/Teen Girlsக்கு அருகே)
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



## விற்பனைக்கு

36 Siri உழவு இயந்திரம், பெட்டி, உழவுக்கலப்பை முல்லைத்தீவில் விற்பனைக்கு உண்டு.

தொலைபேசி இல: (9043)

077 236 9511
077 792 3541



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

(C-4511)

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

IELTS
*Academic / General*
Student / Migration visa

IELTS
*Life skills (A1, B1)*

திருமணமாகி செல்பவர்களுக்கு

for students or spouse who wish to proceed to

**Australia, U.K, Canada, USA & New Zealand.**

Course duration - 2 months (T & C Applied)
Week day & weekend batches
100 % success level assured

Highly experienced lecture panel
Individual attention

(C-6611)

Sirambiyady lane off Stanley road, Jaffna. Call: 021 222 4550



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9042)



# மாலை

*Matrimony*

திருமண சேவை



நிகழும் விகாரி வருஷம் வைகாசி மாதம் 23ம் நாள் (06.06.2019)
வியாழக்கிழமை சுபவேளையில் எமது நிறுவனமாகிய மாலை மற்றிமோனி
சமூக திலகம் அ.கிருபாகரன் (அதிபர் - கிருபா லேணர்ஸ்)
அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது.

நாம் இப்போது

*No.330, Point Pedro Road, Anaippanthi, Jaffna.*
இல.330, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (*Hari Hotel* அருகாமை)
*021 222 3550 077 662 6438*
*076 092 8460*
*Maalaiweds@gmail.com*
*Maalaievents@gmail.com*

Maalai Events
Online Booking Now
www.maalaievents.com

- *Maalai Wedding Cards and Cake Box*
- *Maalai Wedding Halls*
- *Maalai Beauty Parlour*
- *Maalai Photography*
- *Maalai Wedding Travels*
- *Maalai Wedding Gifts*
- *Maalai Decorations*
- *Maalai Wedding Sweets*
- *Maalai Jewellery Shop*
- *Maalai Wedding Dress Items*
- *Maalai Wedding Music Group*
- *Maalai Wedding Flowers*
- *Maalai Wedding Cakes*



இன்று பதிவுகளை மேற்கொள்வோருக்கு அதிவிசேடவிலைக்கழிவுகளாக
**90% Offer**

Wedding Card & Gift Box
எம்மிடமே ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.